# தீரர்கள் கோட்டம்; திருச்சி



## தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்

# தீரர்கள் கோட்டம் ; திருச்சி

அன்பளிப்பு:-
க.சா.த. அழகர்சாமி
நகர் திமுக கலை இலக்கிய
பகுத்தறிவு பேரவை அமைப்பாளர்
சோழ நகரம்.
தேண் மைவட்டம்.
8015371071
9080515932

தலைவர் **கலைஞர்**


சீதை பதிப்பகம்
சென்னை - 600 005.
☎ 9790706549 / 9790706548

நூல் கிடைக்குமிடம் :

**கௌரா புத்தக மையம்**

9,செயிண்ட் ஜான் சர்ச் வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சிராப்பள்ளி-1 ☎ : 99520 34876 / 0431 2419584

---

விலை : ரூ. **20.00**

* முதற் பதிப்பு : 2014
* © உரிமை : தமிழ்க்கனி பதிப்பகம்
* பதிப்பாசிரியர் : **எஸ். கௌமாரீஸ்வரி** M.A., M.L.I.S.,
* நூலின் பெயர் : தீரர்கள் கோட்டம்; திருச்சி
* பக்கங்கள் : 64
* ஒளி அச்சு : ஜெய் ஜீனா
* வெளியீடு : சீதை பதிப்பகம்
4/7, ராஜா அனுமந்தா தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
* ISBN : 978-93-82689-26-3
* அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ் செ - 2

CODE : **1270**

---

**கௌரா ஏஜென்ஸீஸ்**

4A / 168, வி.ஆர். பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
☎ : 044-2844 3791 / 97907 06548 / 97907 06549
www.gowrabookfair.com : E-mail : gowra_09@yahoo.in / gowra09@gmail.com

## தீரர்கள் கோட்டம்; திருச்சி!

திருச்சியில் பிப்ரவரி 15, 16 ஆகிய நாட்களில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பத்தாவது மாநில மாநாட்டினையொட்டி, "முரசொலி" நாளிதழில் நான் தொடர்ந்து எழுதிய ஏழு மடல்களின் தொகுப்பே இந்நூல்.

நான் பல முறை கூறியதைப் போல, இந்தத் திருச்சி மாவட்டம், தமிழகத்திலே உள்ள மற்ற மாவட்டங்களை விட, நான் பிறந்த தஞ்சை மாவட்டத்தை விட, நான் கலைத் துறையில் ஈடுபட்டுப் பணியாற்றிய சேலம், கோவை போன்ற மாவட்டங்களை விட, இப்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற சென்னை மாவட்டத்தை விட என்னை அரசியலிலே கைதூக்கி விட்ட மாவட்டம், திருச்சி மாவட்டம்.

என்னுடைய வாழ்க்கையிலே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பட்டுக்கோட்டை தளபதி அழகிரிசாமி ஆகியோரின் உரைகளைக் கேட்டு வளர்ந்திருந்தாலும் கூட, அரசியலில் என் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை ஏற்படுத்திய மாவட்டம் என்று திருச்சி மாவட்டத்தைத் தான் குறிப்பிட வேண்டும்.

இந்த மாவட்டத்தில் தான், 1953 ஆம் ஆண்டு கல்லக்குடி என்ற தமிழ்ப் பெயர் தான் விளங்க வேண்டும், டால்மியாபுரம் என்ற பெயரை மாற்றிட வேண்டும் என்று நான் தண்டவாளத்திலே தலை வைத்துப் படுத்துப் போராடிய கல்லக்குடிப் போராட்டம் நடைபெற்றது.

1957 ஆம் ஆண்டு இதே திருச்சி மாவட்டத்தில், குளித்தலை தொகுதியிலே நான் நின்று வெற்றி பெற்றேன். இன்னும் சொல்லப் போனால், அந்தத் தேர்தலில் கன்னியாகுமரியிலிருந்து நாகப்பட்டினம் வரையிலே உள்ள இந்தப்பிராந்தியத்தில் தி.மு. கழகத்தின் சார்பில் வெற்றி பெற்ற ஒரே நபர் நான் மட்டும் தான்!

குளித்தலையில் வெற்றி பெற்ற பிறகு, அந்தத் தொகுதி மக்களுக்காக நான் நடத்திய போராட்டம் தான் நங்கவரம் விவசாயப் போராட்டம். நாடு பாதி, நங்கவரம் பாதி என்பார்கள். அவ்வளவு பெருந்தனக்காரரை எதிர்த்து, கையேறு வாரம், மாட்டேறு வாரம் என்ற ஒரு பிரச்சினைக்காக விவசாயிகளோடு இணைந்து போராடியது இந்தத் திருச்சி மாவட்டத்திலே தான்!

அதைத் தொடர்ந்து பேட்டைவாய்த்தலையிலே சர்க்கரை ஆலையிலே போராட்டத்தில் கலந்து கொண்டேன். அது போலவே போக்குவரத்துத் தொழிலாளர்களுக்காக நடைபெற்ற எஸ்.எம்.டி. போராட்டமும் அந்தப் பகுதியிலே தான்! அந்தத் திருச்சியில் தான் வரும் 15, 16 ஆகிய நாட்களில் கழக மாநாடு நடைபெறுகிறது. அந்த மாநாட்டையொட்டி நான் எழுதிய கடிதங்களின் தொகுப்பினை சென்னை சீதை பதிப்பகத்தார் சிறு நூலாக வெளியிட்டிருக்கிறார்கள். கழக மாநாடுகளைப் பற்றிய செய்திகளையெல்லாம் இந்நூல் தாங்கி வெளிவருகிறது. அனைவரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அன்புள்ள,

நாள் : 11.02.2014 (மு. கருணாநிதி)

## திருச்சி என்றாலே,
## திருப்புமுனை மாநாடுதானே? (1)

**உடன்பிறப்பே,**

நம்முடைய கழகப் பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் அவர்களின் 92ஆவது பிறந்த நாளை வடசென்னையில் நாம் கொண்டாடிய போதுதான் கழகத்தின் மாநில மாநாட்டினை 2014ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15, 16ஆம் நாட்களில் திருச்சியில் நடத்துவதென்ற அறிவிப்பினை அலைகடலெனத் திரண்டிருந்த அந்த மக்கள் வெள்ளத்திற்கு மத்தியில் செய்தேன். அந்த அறிவிப்பைத் தொடர்ந்து எழுந்த மக்களின் கரவொலி அடங்கவே நீண்ட நேரமாயிற்று.

திருச்சியிலே மாநில மாநாடு என்று அறிவித்த மறுநாளே திருச்சி மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி கே.என். நேரு சென்னைக்கு வந்து விட்டார். எப்படித்தான் வந்தாரோ அவ்வளவு விரைவில்? நேருவைப் பற்றி நான் கூறவே வேண்டியதில்லை. நிற்கவே மாட்டார்; ஓட்டமும் நடையுமாக இயங்கிக் கொண்டே இருக்கும் சிறந்த செயல் வீரர் அவர்; அதுவும் மாநில மாநாடு என்றால் கேட்கவா வேண்டும்? மாநாட்டினை நான் அறிவித்தது 19ஆம் தேதிதான். அதற்குப் பிறகு இரண்டு முறை சென்னை வந்து சென்று விட்டார். மாநாட்டிற்கு இடத்தைத் தேர்வு செய்வது எங்கே என்பது பற்றி யோசனை கேட்கவும், பந்தலுக்கு யார் பெயரை வைப்பது என்பது பற்றி முடிவெடுக்கவும் இரண்டு முறை வந்து சென்றிருக்கிறார். ஏன், இன்றைய முரசொலியில் கூட, வரவேற்புக் குழுத் தலைவரான, தம்பி கே.என். நேரு, திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் பக்கத்து மாவட்டக் கழகச் செயலாளர்களான தம்பிகள் பெரியண்ணன் அரசு, நன்னியூர் ராஜேந்திரன், ப.துரைசாமி, எஸ்.எஸ். சிவசங்கர் மற்றும் தம்பிகள் ஆ. ராசா,

எம்.பி., என்.செல்வராஜ், என்.சிவா, திருச்சி செல்வேந்திரன், அன்பில் பெரியசாமி, கே.என். சேகரன், மாநகரச் செயலாளர் அன்பழகன், ஆகியோரையெல்லாம் அழைத்து கூட்டம் நடத்தி கலந்தாலோசனை செய்ததோடு, மாநில மாநாட்டுப் பந்தல், சுமார் 15 இலட்சம் பேர் பங்கேற்கக்கூடிய வகையில், 100 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படும் என்று செய்தியாளர்களிடம் தெரிவித்த செய்தி வந்துள்ளது.

1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதியன்று சென்னை ராபின்சன் பூங்காவில் கழகம் தோன்றிய நாள்தொட்டு இதுவரை நாம் ஒன்பது மாநில மாநாடுகளை இந்த 64 ஆண்டு களில் அகிலமே வியந்திடும் வண்ணம் நடத்தி முடித்திருக்கிறோம். தற்போது திருச்சியில் நடைபெறவிருப்பது பத்தாவது மாநில மாநாடாகும். அதுவே ஒரு தனிச் சிறப்புத் தானே? இந்த பத்து மாநில மாநாடுகளில் ஐந்து மாநில மாநாடுகள் திருச்சியில்தான்! அதுவும் திருச்சிக்கு ஒரு பெருமைதான்! பொதுவாக மாநில மாநாட்டிற்குத் தலைவர், கழகத் தலைவர்தான். அந்த வகையில், இந்தப் பத்து மாநில மாநாடுகளில், 6 மாநில மாநாட்டிற்குத் தலைமை அடியேன்தான். அதுவும் எனக்கு சிறப்பு சேர்ப்பதுதானே? பேரறிஞர் அண்ணா அவர்கள் 3 மாநில மாநாட்டிற்கும், நாவலர் அவர்கள் ஒரு மாநாட்டிற்கும் தலைமை தாங்கியிருக்கிறார்கள். இந்தப் பத்து மாநில மாநாடுகளைத் தவிர, சிறப்பு மாநில மாநாடு இரண்டு முறை நடைபெற்றிருக்கிறது.

★ 1997ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27, 28, 29 ஆகிய நாட்களில் சேலத்தில் நடைபெற்றது.

★ 1998ஆம் ஆண்டு செப்டம்பர் 17, 18 ஆகிய நாட்களில் திருநெல்வேலியில் தி.மு.கழகப் பொன்விழா தொடக்கச் சிறப்பு மாநாடு நடைபெற்றது.

மாநில மாநாடுகள் எவ்வெப்போது நடைபெற்றது என்ற விவரம் வருமாறு.

★ 1951ஆம் ஆண்டு டிசம்பர் 13, 14, 15, 16 ஆகிய நாட்களில் சென்னையில் முதல் மாநில மாநாடு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

★ 1956ஆம் ஆண்டு, மே 17, 18, 19, 20 ஆகிய நாட்களில் திருச்சியில் 2 ஆவது மாநில மாநாடு, நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

★ 1961ஆம் ஆண்டு, ஜூலை 13, 14, 15, 16 ஆகிய நாட்களில் மதுரையில், மூன்றாவது மாநில மாநாடு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

★ 1966-1967இல் டிசம்பர் 29, 30, 31, ஜனவரி 1 ஆகிய நாட்களில் சென்னையில், நான்காவது மாநில மாநாடு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

★ 1975ஆம் ஆண்டு டிசம்பர் 25, 26, 27, 28 ஆகிய நாட்களில், கோவையில் ஐந்தாவது மாநில மாநாடு என் தலைமையில் நடைபெற்றது.

★ 1990ஆம் ஆண்டு பிப்ரவரி 9, 10, 11 ஆகிய நாட்களில் திருச்சியில், ஆறாவது மாநில மாநாடு, என் தலைமையில் நடைபெற்றது.

★ 1993ஆம் ஆண்டு மார்ச் 26, 27, 28 ஆகிய நாட்களில், கோவையில் ஏழாவது மாநில மாநாடு, என் தலைமையில் நடைபெற்றது.

★ 1996ஆம் ஆண்டு ஜனவரி 26, 27, 28 ஆகிய நாட்களில், திருச்சியில் எட்டாவது மாநில மாநாடு, என் தலைமையில் நடைபெற்றது.

★ 2006ஆம் ஆண்டு மார்ச் 3, 4, 5 ஆகிய நாட்களில், திருச்சியில் ஒன்பதாவது மாநில மாநாடும், இளைஞர் அணி வெள்ளி விழா மாநாடும் இணைந்து என் தலைமையில் நடைபெற்றது.

★ 1997ஆம் ஆண்டு ஜூன் 27, 28, 29 ஆகிய நாட்களில் சிறப்பு மாநில மாநாடு சேலத்தில் நடைபெற்றது.

★ 1998 செப்டம்பர் 17, 18 ஆகிய நாட்களில் தி.மு.க. பொன்விழா தொடக்கச் சிறப்பு மாநாடு, திருநெல்வேலியில் என் தலைமையில் நடைபெற்றது.

★ மேலும், இதுவரை 56 மாவட்ட மாநாடுகள், கழகத்தின் முன்னணித்

தலைவர்கள், கழகத்திற்காக நாளும் உழைத்த நல்லவர்கள் தலைமையில் நடைபெற்றுள்ளன.

★ தேர்தல் சிறப்பு மாநாடு என்றும், இந்தி எதிர்ப்பு மாநாடு என்றும்

★ வட்டார மாநாடு என்றும்

★ மகளிர் மாநில மாநாடு என்றும்

★ விவசாயிகள் அணி மாநில மாநாடு என்றும்

★ மாநில சுயாட்சி மாநாடு என்றும்

★ திராவிட இயக்க 75 ஆவது ஆண்டு நிறைவு பவள விழா மாநாடு என்றும்

★ மண்டல மாநாடு என்றும்

★ முத்தமிழ் மாநாடு என்றும் 19 முறை மாநாடுகளை நடத்தியிருக்கிறோம்.

★ தி.மு. கழக மாநாடுகள் என்ற நீண்ட வரலாற்று வரிசையில்தான் 2014 பிப்ரவரி 15, 16 ஆகிய நாட்களில் திருச்சியில் பத்தாவது மாநில மாநாடு நடைபெறுகிறது.

இந்த முறை மாநாடு நடைபெறு கின்ற நேரம், நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன்பாக வருகின்ற காரணத்தால் இதற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. திருச்சியிலே நடைபெற்ற மாநாட்டிலேதான், அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலே போட்டியிட லாமா? வேண்டாமா? என்ற ஒரு கேள்வியை எழுப்பி கூடியிருந்த மாநில மாநாட்டு மக்களிடத் திலே, மக்கள் வாக்களிப்பது பிறகு இருக்கட்டும், நாம் தேர்தலில் நிற்கலாமா, வேண்டாமா? என்பதற்கு, இந்த மாநாட்டிலே இருக்கின்ற கழகத் தோழர்களே! நீங்கள் உங்களுடைய முடிவை அறிவியுங்கள் என்று மாநாட்டுப் பந்தலிலே பெட்டிகளை வைத்து வாக்களிக்கச் செய்து அப்பெட்டிகளிலே விழுந்த வாக்குகளிலே, தேர்தலில் நிற்கலாம் - தேர்தலிலே ஈடுபடலாம் என்பதற்காக விழுந்த வாக்குகள்தான் அதிகமாக இருந்த காரணத்தால், திருச்சியில் நடந்த அந்த மாநில மாநாட்டிலேதான், அண்ணா இருந்து நடத்திய அந்த மாநாட்டிலேதான், திராவிட முன்னேற்றக்

கழகம் தேர்தலிலே நிற்கலாம் என்ற ஜனநாயக ரீதியான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

திருச்சி மாநாட்டில் எடுத்த அந்த முடிவின்படி, மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு அதே திருச்சியில் நம்முடைய கழகத்தினுடைய மாநில மாநாட்டை நடத்த எண்ணியிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, இதே திருச்சியில்தான் 1970ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் திருச்சி மாவட்ட ஐந்தாவது மாநாடு நடத்தினோம். அந்த மாநாட்டிலேதான் இறுதியாக நான் உரையாற்றிய நேரத்தில், கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களை வெளியிட்டேன். அந்த முழக்கங்கள்தாம்,

1. அண்ணா வழியில் அயராது உழைப்போம்!
2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!
3. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!
4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!
5. மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி!

1970 பிப்ரவரி 22ஆம் நாள் திருச்சியில் எழுப்பப்பட்ட அந்த ஐம்பெரும் முழக்கம் தாங்கள் இன்றைக்கும் தி.மு. கழகத்தின் இதய கீதமாக இருந்து நம்மையெல்லாம் இயக்கி வருகின்றன. அந்த மாநாட்டிற்கு திருச்சி தந்த தீரர், நண்பர் அன்பில் தான் வரவேற்புக் குழுத் தலைவர் - மாநாட்டுத் தலைவர் சிந்தனைச் சிற்பி அண்ணன் சி.பி. சிற்றரசு - திறப்பாளர் கழகப் பொருளாளராக இருந்த அருமை நண்பர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். மாநில மாநாட்டைப் போல விளங்கிய அந்த மாவட்ட மாநாட்டின் ஊர்வலச் சிறப்பு குறித்து முரசொலியில் அப்போது தம்பி முரசொலி மாறன் அருமையானதொரு சொல்லோவியத்தையே தீட்டியிருந்தார். அதில் ஒரு சிறு பகுதியை மட்டும் - அது சாலப் பொருத்தம் என்பதால் இப்போது நினைவுபடுத்துகிறேன்.

ஒரு மாநில மாநாட்டை நடத்தி விட்டு மாவட்ட மாநாடு என்று அன்பிலார் பொய் கூறிவிட்டார். திருச்சி மாநாடு பல விதங்களில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது. அண்ணாவிற்குப் பிறகு, கழக வரலாற்றில் இந்த மாநாடு ஒரு

குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். சொற்பொழிவு - நாடகம் - கலை நிகழ்ச்சி - பத்திரிகை - சுவரொட்டி ஆகியவற்றை பலமான பிரச்சார ஆயுதங்களாக தி.மு.கழகம் பயன்படுத்தி வருவது போல உலகத்தில் எந்த அரசியல் கட்சியும் பயன்படுத்துவ தில்லை என்று நமது இயக்கத்தைப் பற்றி ஆராய்ச்சி நடத்தும் ஒரு அமெரிக்க மாணவர் என்னிடம் (முரசொலி மாறனிடம்) குறிப்பிட்டார். அந்தப் பட்டியலிலே நாம் ஊர்வலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று தொடங்கும் முரசொலி மாறனின் அந்தக் கட்டுரையில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற பல்வேறு ஊர்வலங்களின் பெருமைகளையெல்லாம் தொகுத்திருப்பார்!

அந்த மாவட்ட மாநாட்டின் ஊர்வலத்தின் தொடக்கத்திலேயே நான் ஒரு பெரும் ஆபத்திலே இருந்து தப்பிப் பிழைத்தேன். ஊர்வலத்தில் தலைவர்கள் அமர்வதற்காக அலங்கரிக்கப்பட்ட ரதம், திருச்சி சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலைக்குப் பின்புறமாக இருந்தது. அதில் நாங்கள் அமர்ந்திருந்தோம். ஊர்வலத்தின் முகப்பு கண்ணுக்கெட்டிய தொலைவு வரையில் நீடித்திருந்தது.

ஊர்வலம் புறப்படுவதற்கு முன்பு, அங்கே யிருக்கும், அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க என்னை அன்பிலும், பராங்குசமும், எம்.எஸ்.மணியும், ராபியும் அழைத்தார்கள். அப்போது நான், இப்போது மாதிரி இல்லையே! இன்றைக்கு நம் கழகப் பொருளாளர், தம்பி மு.க.ஸ்டாலின் எங்கே கழக நிகழ்ச்சிக்கு அழைத்தாலும், ஓடோடிச் செல்கிறாரே, அதைப் போலத்தான், ஏன் இதைவிட அதிகமாகத்தான் நான் அப்போதிருந்தேன். எனவே அண்ணா சிலைக்கு மாலை என்றதும், ரதத்திலிருந்து குதித்து, அண்ணா சிலை நோக்கி வேகமாகச் சென்றேன். சிலை அருகே நின்று கொண்டு, மிகப் பெரிய மாலை ஒன்றை அண்ணா சிலையின் கழுத்திலே அணிவித்தேன். ஒரு இமைப் பொழுதுதான். என்ன நடந்தது என்றே தெரியவில்லை! என் கையை வேகமாக நான் இழுத்துக் கொள்ளாமல் இருந்திருந்தால், அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்த நிலையிலேயே, அவரது சிலையைக் கட்டித் தழுவியபடியே மின்சார ஷாக்கிற்குப் பலியாகி, அன்றைக்கே போய்ச் சேர்ந்திருப்பேன்.

ஆம், மாநாட்டை முன்னிட்டு அண்ணா சிலைக்கு மின் விளக்கு அலங்காரம் செய்திருந்தார்கள். மிக நுண்ணிய மின் கம்பிகள் அந்தச் சிலை மீதும், பீடத்திலும் சுற்றப்பட்டிருந்திருக்கின்றன. ஈரமான மாலையை நான் அணிவித்த மாத்திரத்தில் பயங்கரமான ஷாக் அடித்து, என்னை வேகமாக இழுத்த போது, நான் வெடுக்கென்று கையை இழுத்துக் கொண்டதால் தப்பிப் பிழைத்தேன் என்பதைப் புரிந்து கொண்டேன். அன்பில் போன்றவர்கள் அதிர்ச்சி யால் என்னவோ நடந்து விட்டது என்பதைப் புரிந்து கொண்டு வாயடைத்து வருந்தித் தவித்தார்கள். ஒரு நிமிட நேரம்தான்! பிறகு நான் ரதத்தில் அமர்ந்து ஊர்வலத்தைப் புறப்படச் சொன்னேன். மக்கள் வெள்ளம் என்னை ஊர்வலப் பந்தலுக்கு இட்டுச் சென்றது.

அன்று நடைபெற்றது மாவட்ட மாநாடா? மாநில மாநாட்டைப் போல அல்லவா மக்கள் குழுமியிருந்தார்கள்! மாநாட்டின் பொருளாளர், கழகப் பொருளாளராக இருந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல் நாளே மாநாட்டுத் திறப்பு விழா உரையை நிகழ்த்தி விட்டு, மறுநாள் காலையில் அவசரப் படப்பிடிப்புக்காக வெளியூர் சென்று விட்டார். மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக நான் ஆற்றிய நிறைவுரை இன்னமும் என் நினைவில் நிற்கிறது. அடுத்த கடிதத்தில் அதைத் தொடங்குகிறேன்.

அந்தத் திருச்சியில்தான் தற்போது மாநில மாநாடு நடைபெறவிருக்கிறது. பிப்ரவரி திங்கள் 15, 16இல் மாநாடு! அதற்குள் இந்த மாநாடு குறித்து மேலும் சில விவரங்களை நான் தொடர்ந்து உனக்கு ஒவ்வொரு வாரமும் ஞாயிறு தோறும் வழங்கிட இருக்கிறேன். அதனால்தான் சற்று விரிவாகவே இந்தக் கடிதத்தில் கூறத் தொடங்கியிருக்கிறேன். மாநாட்டிற்குப் புறப்பட இன்னும் ஒன்றரை மாதங்கள் இருக்கிறதே என்று எண்ண வேண்டாம்; இப்போதே பயண ஏற்பாட்டினைத் தொடங்கி விடு! வாகனங்களுக்கு முன்பணம் கொடுத்து விடு! குடும்பத்தோடு மாநாட்டிற்கு வருவதுதானே நமது வழக்கம். அதற்கும் தகுந்தாற்போல சொல்லி வைத்து விடு! திருச்சியில் மாநாடு என்றால் எப்போதும் அது திருப்பு முனை மாநாடுதான்!

அன்புள்ள,

மு.க.

## திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (2)

**உடன்பிறப்பே,**

கடந்த ஞாயிறு அன்று கழகத்தின் மாநில மாநாடுகள் எவ்வெப்போது நடைபெற்றன என்பது குறித்தும், அந்த மாநாடுகள் எங்கே, யார் தலைமையில் நடைபெற்றன என்பது குறித்தும், திருச்சியில் நடைபெறவிருக்கும் பத்தாவது மாநில மாநாடு பற்றியும் எழுதத் தொடங்கியதைப் படித்திருப்பாய்! திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில் கழகம் தேர்தல்களில் போட்டியிடலாமா, வேண்டாமா என்று மாநாட்டில் வாக்குப் பெட்டிகள் வைத்து, மாநாட்டிற்கு வந்திருந்தோரின் கருத்து அறிந்து ஜனநாயக ரீதியாக முடிவெடுக்கப்பட்ட கழக வரலாற்று நிகழ்வு பற்றியும், தற்போது அதே திருச்சியில் நடைபெறவிருக்கின்ற பத்தாவது மாநில மாநாடு, நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் வருவதற்கு முன்பு நடைபெறவிருப்பது பற்றியும் விளக்கியிருந்தேன்.

1949ஆம் ஆண்டு பிறந்த கழகம் தன்னுடைய முதல் மாநில மாநாட்டை 1951ஆம் ஆண்டு டிசம்பர் 13, 14, 15, 16 ஆகிய நாட்களில் சென்னையில் பேரறிஞர் அண்ணா தலைமையில் நடத்தியது என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன் அல்லவா; அதற்கு முன்பு 1951 நவம்பர் 17ஆம் தேதியன்று காலையில் மதுரையில் பொதுக்குழு உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. தற்போது சில கட்சி களின் செயற்குழுவும், பொதுக்குழுவும் மாலை 3 மணிக்குத் தொடங்கி 6 மணிக்கெல்லாம் முடிந்து விடுகிறதல்லவா? அப்போது முதல்நாள் காலையில் கூடிய தி.மு.கழகத்தின் பொதுக்குழு மறுநாள் காலையிலேதான் முடிவுற்றது. இடைவேளை என்பதே இல்லாமல் பலரும் கருத்துரை வழங்கிட

வாய்ப்பளிக்கப்பட்டுத் தொடர்ந்து விவாதங்கள் நடைபெற்றன. சென்னையில் டிசம்பரில் நடைபெற விருந்த முதல் மாநில மாநாட்டின் திறப்பாளராக தோழர் ஈ.வி.கே.சம்பத் அவர்களின் பெயரை குடந்தை கே.கே.நீலமேகம் முன்மொழிந்தார். நாவலர் நெடுஞ்செழியன் பெயரை நான் முன் மொழிந்தேன். அதற்கிடையே அண்ணா அவர்கள் மாநாட்டுத் திறப்பாளராக கே.கே.நீலமேகம் அவர்களே இருக்கட்டும் என்று முடிவினை அறிவித்தார். மாநாட்டுத் தலைவராக, பேரறிஞர் அண்ணா அவர்களும், திறப்பாளராக பெரியவர் கே.கே.நீலமேகம் அவர்களும், கண்காட்சித் திறப்பாளராக அண்ணன் சி.பி. சிற்றரசு அவர்களும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

முதல் மாநில மாநாடு பற்றி எத்தனை எத்தனை நினைவுகள்? சென்னையில் மாநில மாநாட்டிற்கான வேலைகள் இரவும் பகலும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அண்ணாவும், நாங்களும் இரவு பகலாக மாநாட்டுப் பந்தலிலேயே அமர்ந்து மாநாட்டு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தோம்.

ஒருநாள் இரவு 11 மணி. பந்தலில் பரப்புவதற்காகக் கொட்டப்பட்டிருந்த மணல் மேட்டில் அண்ணா அவர்களும் நானும், வேறு சில நண்பர்களும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். மாநில மாநாட்டிற்கு முன்பு நாகர்கோவிலில் நடைபெற்ற குமரி மாவட்ட மாநாட்டில், கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களை உள்ளூர் நண்பர்கள் அனுமதிக்காமல் தடுத்துவிட்டதால், அவர் மனம் புண் அடைந்திருப்பதை அண்ணாவிடம் தெரிவித்து, மாநில மாநாட்டிற்கு கலைவாணரையும் அழைக்க வேண்டுமென்று கூறினேன். உடனே அண்ணா, நீ இப்போதே சென்று அவரை அழைத்துவா என்றார். இப்போது போல் அப்போது செல்போன் எல்லாம் கிடையாது. நான் காரை எடுத்துக் கொண்டு, கலைவாணர் இல்லத்திற்கே சென்று, அண்ணா அழைப்பதாகச் சொன்னவுடன், கலைவாணர் அருவி போல கண்களில் நீரைப் பொழிந்து கொண்டு காரிலே ஏறி உட்கார்ந்தார். மாநாட்டுப் பந்தலுக்கருகே அண்ணா அமர்ந்திருந்த மணல் மேட்டிற்கருகே கலைவாணர் வந்து அண்ணாவைக் கட்டிப்பிடித்துக் கொண்ட காட்சியும், அண்ணா தழுதழுத்த குரலில் அவரை வரவேற்றக்

காட்சியும் மறக்க முடியாத காட்சி அல்லவா? என்ன அண்ணா? இந்த மாநாட்டில் நான் கிடையாதா? என்று கலைவாணர் கேட்டதும், மாநாடே உங்கள் வில்லுப்பாட்டோடுதானே துவங்குகிறது என்று அண்ணா பதில் கூறினார்.

1951ஆம் ஆண்டு மதுரைப் பொதுக் குழுவில் முதல் மாநில மாநாட்டின் திறப்பாளரை முன்மொழிந்த நான், தற்போது பிப்ரவரியில் திருச்சியில் நடைபெறவுள்ள பத்தாவது மாநில மாநாட்டிற்கு, தலைமையேற்று கொடியேற்றுபவனாகவும், நம்முடைய பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் அவர்கள் திறப்பாளராகவும், கழகப் பொருளாளர் தளபதி தம்பி மு.க.ஸ்டாலின் மாநாட்டின் பொருளாளராகவும், திருச்சி மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி கே.என்.நேரு, வரவேற்புக் குழுவின் தலைவராகவும் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலம் முழுதும் கழகமும், நானும் மறக்க முடியாத திருச்சி தந்த திராவிடத்துத் தீரர் அன்பில் அவர்களின் பெயர் ஏற்கெனவே பலமுறை அறிவிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், நடைபெறவுள்ள பத்தாவது மாநில மாநாட்டின் பந்தலுக்கு, திருச்சி மாவட்டத்திற்கு அருகே உள்ள சேலம் மாவட்டத்தில் கழகம் வளர்த்த சேலத்துச் சிங்கம் என் அருமைத் தம்பி, வீரபாண்டி எஸ்.ஆறுமுகத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. வீரபாண்டி ஆறுமுகத்தின் அருமை மகன்கள் ராஜாவும், பிரபுவும் மற்றும் அந்த மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சிவலிங்கம், பனமரத்துப்பட்டி ராஜேந்திரன் மற்றும் கழக உடன்பிறப்புகளும் என்னைச் சந்தித்து அதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். இளம் வயதிலேயே கரூர் மாவட்டக் கழகச் செயலாளராகி, மகளிரால் மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்பையும் திறம்பட வகிக்க முடியுமென்பதை எடுத்துக்காட்டிய வீராங்கனை, அற்புதமாகப் பணியாற்றி, சாலை விபத்து ஒன்றில் சிக்கி மறைந்த சகோதரி வாசுகி முருகேசனின் பெயர் மேடைக்கு வைக்கப்பட்டுள்ளது. அதற்காக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நன்னியூர் ராஜேந்திரன், குளித்தலை சிவராமன், வாசுகியின் கணவர் முருகேசன், தம்பி ரவிக்குமார் மற்றும் நண்பர்கள் என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள்.

அதுபோலவே இளம் வயதிலேயே இயக்கப் பணி தொடங்கி; படுகிழமாக ஆன பிறகும் தொய்வில்லா மல் தொடர்பணியாற்றிய மூதாட்டி, குளித்தலை தந்த பெருமாட்டி பொற்செல்வி இளமுருகு பெயரால் அரங்கம் - ஆங்கிலத்திலும், தமிழிலும் அற்புதமாகப் பேசவும், எழுதவும் திறமையை வளர்த்துக் கொண்டு, அண்ணாவின் அன்பைப் பெற்று அவர் அருகிலேயே இருந்து பணியாற்றி, மறைந்த எம்.எஸ்.வெங்கடாசலம் பெயரில் முன் முகப்பு - திருச்சி மாவட்டக் கழகப் பொருளாளராக, மேயராக சிறப்பாகப் பணியாற்றி மறைந்த மா.பாலகிருஷ்ணன் பெயரில் உள் முகப்பு, திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றி, கொடியோரால் கொலை செய்யப்பட்ட கழகக் காளை, பூண்டி கே.கலைச்செல்வன் பெயரால் நுழைவு வாயில் திருச்சியில் கழகம் வளர்த்திட நீண்ட காலம் உழைத்திடுவான் என்று நான் எண்ணியிருந்த அடலேறு, மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி நேருவின் உடன்பிறப்பு, தம்பி கே.என். ராமஜெயம் பெயரால் கொடி மேடை என்று பெயர்கள் அறிவிக் கப்பட்டு மாநாட்டுப் பணிகள் முறையாக நடைபெற்று வருகின்றன. மா.பாலகிருஷ்ணன் அவர்களின் மகன் பரணிகுமார் மற்றும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள், திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் கலைவாணன் ஆகியோரும் நன்றி தெரிவித்தார்கள்.

இந்தப் பத்தாவது மாநில மாநாட்டிற்குப் பிறகு, நாம் இந்திய நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைச் சந்திக்க விருக்கிறோம். முதல் மாநில மாநாட்டிலேயே பொதுத் தேர்தலில் கலந்து கொள்வது என்றும்; பிறகு மதுரை பொதுக்குழுவில் நீண்ட நேரம் விவாதித்து, 1952இல் நடைபெறும் பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் தன் வேட்பாளர்களை நிறுத்துவதில்லை என்றும்; கம்யூனிஸ்டுகளையும், கழகத்தின் ஆதரவுகோரி தலைமை நிலையத்திற்கு வேட்பு மனுக்களை அனுப்பி, தி.மு.க. குறிப்பிடும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, பொதுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றவர்களை மட்டுமே ஆதரிப்பது என்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

1951 டிசம்பர் 13ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக சென்னை அறிவகத்திலிருந்து

மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, பந்தலை அடைந்தது. கழகப் பொதுச் செயலாளர், மாநாட்டுத் தலைவர் அண்ணா கழகத்தின் இரு வண்ணக் கொடியை ஏற்றி வைத்தார். மறுநாள் கே.கே. நீலமேகம் மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றிய பிறகு, மாநாட்டை தலைமை யேற்று நடத்தித் தருமாறு அண்ணா அவர்களை என்.வி.நடராசன் முன்மொழிந்தார். அதனை வழிமொழிந்து பேசுபவர் பட்டியலில் நாவலர், ஈ.வி.கே. சம்பத், சி.பி.சிற்றரசு, டாக்டர் தர்மாம்பாள், கே.ஏ. மதியழகன், தில்லை வில்லாளன், பராங்குசம், சத்தியவாணி முத்து, அன்பில் தர்மலிங்கம், எம்.எஸ். சிவசாமி, பழனிச்சாமி, எஸ்.ஏ. ராசமாணிக்கம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, முல்லை வடிவேலு, நாஞ்சிலார், சி.வி.எம். அண்ணாமலை ஆகியோர் பெயர்களும், என் பெயரும் இருந்தன.

அண்ணா அவர்களை வழிமொழிந்து நான் அப்போது பேசியது -

வாழ்வு மூன்று எழுத்து;
வாழ்விற்குத் தேவையான பண்பு மூன்று எழுத்து;
பண்பிலே பிறக்கும் அன்பு மூன்று எழுத்து;
அன்பிலே சுரக்கும் காதல் மூன்று எழுத்து;
காதல் விளைவிக்கும் வீரம் மூன்று எழுத்து;
வீரர் செல்லும் களம் மூன்று எழுத்து;
களத்திலே பெறும் வெற்றி மூன்று எழுத்து;
அந்த வெற்றிப் பாதைக்கு நம்மை அழைத்துச் செல்லும் அண்ணா மூன்று எழுத்து
அந்த அண்ணனைத் தலைமையேற்க வழிமொழிகிறேன்.

62 ஆண்டுகளுக்கு முன்பு என் அண்ணனைத் தலைமையேற்க நான் வழிமொழிந்து பேசியதை நானும் மறக்கவில்லை; என்னை அறிந்த எவரும் மறக்கவில்லை! ஆனால் அந்த என் அண்ணன், என்னை இந்தக் கழகத்திற்குத் தலைமையேற்க, சொல்லாமல் சொல்லிக் கட்டளை வழங்கிவிட்டு, மறைந்து 43 ஆண்டுகளாகி விட்டன! இல்லை யில்லை; அவர் மறையவும் இல்லை; அவர் மறைந்ததாக நாம் நினைக்கவும்

இல்லை; நம் சொல்லில், செயலில், உயிர்த் துடிப்பில் கலந்து வருகிறார்!

அந்த முதல் மாநாட்டில் உரையாற்றியபோதுதான் அண்ணா நமது இலட்சியத்தை நோக்கி, அமைதிப் பாதையிலே நடந்து செல்கின்றோம். அந்தப் பயணத்தின் இடையிலே வரும் பிரச்சினைகள், பாதையிலே வரும் நண்பர்களைப் போல; பேசிக் கொண்டே செல்வோம், பிரிவோம் - ஆனால் பாதையை விட மாட்டோம், மழை பெய்தால் ஒதுங்கி நிற்போம், சிறிது நேரம் - ஓய்ந்து விடமாட்டோம். தொடர்ந்து நடப்போம். பனி, மழை, வெய்யில், குளிர், இரவு, பகல் என்ற எதுவும் பயணத்தை நிறுத்தாது - பாதையை மாற்றாது. பாதையில் பிணங்கள் கிடக்கலாம். எலும்புக் கூடுகள் இருக்கக்கூடும். அவைகளைச் சுற்றி கழுகுகள் வட்டமிடலாம். நரிகளின் ஊளை கேட்கலாம். ஆனால் நாம் பாதையைத் தவறவிடோம். பிணமும், பிறவும் நமக்கு முன்னால் வீரர்கள் சென்றிருக்கிறார்கள் என்பதின் சின்னங்கள் என்றே கருதி நடப்போம். இடையிலே வரும் பிரச்சினைகளுக்காக நாம் எதற்காக உருவாகி, உழைத்து வருகின்றோமோ அந்த அடிப்படை இலட்சியத்தை இழந்துவிட மாட்டோம் என்றெல்லாம் நமக்குப் பாடம் நடத்தினார்.

1951ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் மாநில மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களை நான் வழிமொழிந்தேன். 1956ஆம் ஆண்டு மே திங்கள் 17, 18, 19, 20 ஆகிய நாட்களில் இதே திருச்சி மாநகரில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில், மாநாட்டுத் தலைவராக நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை வழிமொழிந்து அண்ணா அவர்களே பேசினார். ஆம்; வரலாற்றுப் புகழ் பெற்ற அந்த வார்த்தைகளை யார்தான் மறப்பார்கள்? தம்பீ, வா! தலைமை ஏற்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம்! வா! - இதுதான் அண்ணா அவர்கள், நாவலரை வழிமொழிந்து பேசிய வைர வரிகளாகும். ஆனால் அதற்குப் பிறகு, அந்தப் பேச்சுக்கான விளக்கத்தை மாநாட்டு இறுதி உரையில், அண்ணா தந்தார். எனக்குத் தம்பியாக இருந்தாலும், நாமெல்லாம் பார்த்து ஒருவரைப் பொதுச் செயலாளராக ஆக்கி விட்டு, பிறகு அவர் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பதும், அந்தத் தலைமையை மதிப்பதும்தான், கட்சிக்

கட்டுப்பாட்டை வளர்க்கும். அப்படி தலைமைக்கு மதிப்பளித்து நடக்கும் பழக்கத்தை நான் என் அரசியல் வாழ்க்கையில் பல ஆண்டுகளாக மேற்கொண்டிருக்கிறேன் என்று அண்ணா அவர்கள் கட்டுப்பாடு என்பதற்கு விளக்கமளித்துப் பேசினார்கள். இப்படியெல்லாம் கட்டுப்பாடு பற்றி நமக்குப் போதித்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு நம்மை இலட்சியப் பயணத்தில் வழி நடத்திய மாநாடுகள், பொதுக் குழுக்கள், செயற் குழுக்கள்தான் எத்தனை எத்தனை? இன்றைக்கு அவர் இல்லை, ஆனால் அவர் உருவாக்கிய நமது உயிர் மூச்சான கழகம் இருக்கிறது. ஆல் போல் தழைத்து ஆகாயமளவுக்கு உயர்ந்து நிற்கின்றது. அந்தக் கழகத்தின் பத்தாவது மாநில மாநாடுதான் திருச்சியில் பாங்குற நடைபெறவுள்ளது.

மாநாடு பற்றி இன்றைய (4-1-2014) தினமணி நாளேட்டில் பந்தல் பணி நடைபெறுகின்ற புகைப்படத்தோடு பெரிதாகச் செய்தி வெளிவந்துள்ளது. திண்டுக்கல் சாலையில் தீரன்நகர் பகுதியில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் இடம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெறுவதாகவும், ஒரு கிலோ மீட்டர் தொலை வுக்கு மாநாட்டுப் பந்தல் அமைவதாகவும், மழை பெய்தாலும் மாநாடு தடைபடாத வகையில் தகரக் கூரைகளால் பந்தல் அமைக்கப்படுவதாகவும், இந்த மாத இறுதிக்குள் பந்தல் அமைக்கும் பணி நிறை வடையும் என்றும், மாநாட்டுப் பகுதியில் 20 இடங்களில் போர்வெல் அமைக்கும் பணி தொடங்கப் பட்டிருப்பதாகவும், சுவர் விளம்பரப் பணிகள் தொடங்கி விட்டதாகவும் வரவேற்புக் குழுத் தலைவர் கே.என்.நேரு தெரிவித்திருக்கிறார்.

கழகத்திலே இரண்டறக் கலந்து காலமெல்லாம் பணியாற்றும் உன்னைப் போன்ற உடன்பிறப்புகளில் ஒருசிலர்தான் இந்தப் பத்து மாநில மாநாடுகளிலும் கலந்து கொண்டவர்களாக இருப்பீர்கள்! முதல் மாநில மாநாட்டிலும், இரண்டாவது மாநில மாநாட்டிலும் கலந்து கொண்டவர்கள் ஒருசிலர் தான் இருப்பீர்கள். பத்தாவது மாநில மாநாட்டைத் தவற விடலாமா? ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் சொல்வதற்காக, காரிலேயே புறப்பட்டு வந்த வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி கே.என்.நேரு இரவு 8.30 மணியளவில் எனக்கு வாழ்த்துத்

தெரிவித்துவிட்டு, அன்றிரவே காரிலேயே திருச்சிக்குப் புறப்பட்டார். இந்த இரவிலா பயணம்? என்ற போது, காலையிலே வேலை இருக்கிறதண்ணா என்று பாசத்தோடு கெஞ்சி விட்டுச் சென்றார். அவர் சென்றுவிட்டார், ஆனால் அவர் பத்திரமாக ஊர் சென்று திரும்ப வேண்டுமே என்று நான் கவலைப்பட்டேன். உடன்பிறப்புகள் மீது இவ்வாறு நான் கொண்ட பாசம்தானே, இத்தனை வயதிலும் கழகம், கழகம், கழகம் என்று கவலைப்பட வைக்கிறது. என்னுடைய கவலை இருக்கட்டும்; இதோ ஜனவரி பிறந்து விட்டது; அடுத்த வாரம் பொங்கல்; பின்னர் பிப்ரவரி திங்கள் முதல் வாரத்தில் நம் அண்ணனின் நினைவு நாள்; இப்படியே நாட்கள் ஓடி விடும். பயணம் புறப்படு; பத்திரமாக வந்திடு; உன் வரவுக்காக என் விழிகள் காத்திருக்கும்!

அன்புள்ள,

மு.க.

## திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (3)

உடன்பிறப்பே,

1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17இல் கழகம் பிறந்த பிறகு, அதற்கும் 1951ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் தேதி முதல் மாநில மாநாடு சென்னையில் நடைபெற்ற தற்கும் இடையில் இரண்டாண்டு காலத்தில் மட்டும் 12 கழக மாநாடுகள் நடைபெற்றன. மாவட்ட மாநாடுகள் என்ற வகையில் பார்த்தாலும் கூட, தி.மு. கழகத்தின் முதல் மாநாடு, திருச்சி மாவட்ட தி.மு.கழக மாநாடு 1950ஆம் ஆண்டு இதே ஜனவரி முதல் நாள் அன்று திருச்சியிலே தான் நடைபெற்றது. எனவே தி.மு. கழகத்தின் முதல் மாநாட்டினை, கழகம் மூன்று மாதக் குழந்தையாகத் தவழ்ந்து கொண்டிருந்தபோதே, நடத்திய பெருமையும் திருச்சிக்குத்தான் உண்டு. தற்போது கழகம் 64 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில், பத்தாவது மாநில மாநாட்டை நடத்துகின்ற பட்டொளி வீசிடும் பெருமையும் திருச்சிக்கே கிடைத்துள்ளது. மேலும் திருச்சியில் நடைபெற்ற அந்த முதல் மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய சந்திரமோகன் நாடகம் நடைபெற்றது. அண்ணா அவர்களே அதில் நடித்தார் என்பது சரித்திரம்.

1951ஆம் ஆண்டு சென்னையில் முதல் மாநில மாநாட்டை அண்ணா முன்னின்று நடத்திய போது, மாநாட்டை நடத்துவதற்கு செலவுக்குப் பணம் திரட்ட வேண்டிய பெரும் பணி அண்ணா அவர்களுக்கும், எங்களுக்கும் ஏற்பட்டது. அப்போது ஒவ்வொரு நாளும் அண்ணா அவர்கள் சென்னையிலே தோழர் களோடு அமர்ந்து மாநாட்டுப் பந்தல் வேலைகளை அவரே நேரடியாகக் கவனித்துக் கொண்டிருக்கிற போது, சி.வி.எம். அண்ணாமலை அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு செங்கற்பட்டு மாவட்டத்தில்

கூட்டங்களுக்குத் தேதி தந்து, ஒவ்வொரு கூட்டத்திலும் இருநூறு ரூபாய் மாநாட்டு நிதியாக அன்றைக்கு வாங்கித் தருவார். ஒரு நாளைக்கு ஏழு கூட்டம், எட்டு கூட்டம் இருக்கும். கூட்ட முடிவில் மொத்தமாகக் கிடைப்பது ஆயிரத்து அறுநூறு அல்லது ஆயிரத்து எண்ணூறு ரூபாய் என்ற அளவில் நிதி திரளும். விடியற்காலை இரண்டு அல்லது மூன்று மணிக்குத் தான் இரவு சாப்பாடு போடுவார். நானும், சி.வி.எம். அவர்களும் அந்தக் கூட்டங்களையெல்லாம் முடித்து விட்டு ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் பணத்தோடு நேராக எஸ்.ஐ.ஏ.ஏ. திடலுக்குத்தான் வருவோம். அங்கே மாநாட்டுக்காகக் குவிக்கப்பட்டிருந்த மணலிலே அண்ணா அமர்ந்திருப்பார். தோழர் கள் சுற்றிலும் அமர்ந்திருப்பார்கள்; நாவலர், பேராசிரியர், ஈ.வி.கே. சம்பத், நாஞ்சிலார் என்று இவர்கள் எல்லாம் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். அண்ணாவிடம் பெருமையோடு பணத்தைக் கொடுப்போம். அண்ணா பணத்தை வாங்கிக் கொண்டு; எங்கே உணவருந்தினீர்கள்? என்று கேட்பார். உத்திரமேரூரில் அண்ணா என்று சொல்வேன். என்ன சாப்பாடு? என்று கேட்டு விட்டு, நான் பதில் கூறுவதற்குள் அண்ணாவே, அண்ணாமலைக்கு வேண்டியதையெல்லாம் உன் பெயரைச் சொல்லி தயாரித்து வைக்கச் சொல்லி யிருப்பாரே? என்று வேடிக்கையாகச் சொல்வார்.

1950ஆம் ஆண்டு ஜனவரியில் திருச்சியில் முதல் மாநாட்டினை நடத்திய தி.மு. கழகம், அதே ஜனவரி 21ஆம் தேதி சென்னையில் மாவட்ட முதல் மாநாட்டினையும், 29ஆம் தேதி கோவையில் அந்த மாவட்ட முதல் மாநாட்டினையும் நடத்தியது. 1950ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் தேதியன்று தி.மு. கழக மகளிர் மாநாடு ஒன்று சென்னையில் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் தலைமையில் நடைபெற்றது. அதே ஆண்டு சூன் 10ஆம் தேதியன்று மதுரை மாவட்ட முதல் மாநாடும், ஆகஸ்ட் 26, 27 ஆகிய நாட்களில் நெல்லை மாவட்ட முதல் மாநாடும், நவம்பர் 8ஆம் தேதியன்று சென்னை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடும், டிசம்பர் 23, 24 ஆகிய நாட்களில் செங்கை மாவட்ட முதல் மாநாடும், டிசம்பர் 29, 30 ஆகிய நாட்களில் குமரி மாவட்ட முதல் மாநாடும், 1951ஆம் ஆண்டு மார்ச் 3, 4 ஆகிய நாட்களில் தஞ்சை மாவட்ட முதல்

மாநாடும், அதே ஆண்டு மே 5, 6 ஆகிய நாட்களில் சேலம் மாவட்ட முதல் மாநாடும், அதே ஆண்டு ஜூலை 29ஆம் தேதியன்று திண்டுக்கல்லில் எழுத்துரிமை, பேச்சுரிமை மாநாடும் நடைபெற்ற பிறகு தான் டிசம்பரில் சென்னையில் முதல் மாநில பொது மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாடுகளில் 1950ஆம் ஆண்டு ஆகஸ்டு 26, 27 ஆகிய நாட்களில் நடைபெற்ற நெல்லை மாவட்ட முதல் மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் பொறுப்பினை அண்ணா அவர்கள் எனக்கு வழங்கினார். இன்றைய அமைப்புச் செயலாளர் தம்பி டி.கே.எஸ். இளங்கோவன், எம்.பி.யின் அருமைத் தந்தையாரும், தொலைவிலிருந்து ஒலி பெருக்கியில் பேச்சைக் கேட்டால், அண்ணா அவர்கள் பேசுவதைப் போலவே தெரிகின்ற அளவிற்கு பேசக்கூடிய ஆற்றலாளருமான தத்துவமேதை டி.கே. சீனிவாசன்தான் அந்த மாநாட்டின் திறப்பாளர். நான் தலைமையேற்று நடைபெற்ற முதல் மாநாடும் அதுதான். அப்போது என்னுடைய வயது 26 தான். எனது தலைமை உரையில், என் போன்றவர்களுக்கு இந்தச் சிறப்பு வழங்கப்படுவதன் நோக்கம், இயக்கம் இளைஞர்களின் சொத்து, உழைப்பாளிகள் அமைத்த மாளிகை, அதில் உல்லாசபுரியினர் வாழ முடியாது என்பதை நாட்டுக்கும், நாட்டிலே நம்மைப் பற்றி நச்சுக் கருத்துக்களை நடமாட விடுபவர்களுக்கும் எடுத்துக் காட்டத்தான் என்றே நான் கருதுகிறேன். நாடு நம்மைத்தான் எதிர்பார்த்து நம்பிக் கிடக்கிறது. நாம் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையையும் காதைத் தீட்டிக் கொண்டு நாடு கவனிக்கிறது. இந்திய உபகண்டத்திலேயே நாம் பெரிய கட்சிகளில் ஒன்றாகி விட்டோம். வேறு எந்தக் கட்சிக்கும் இளைத்தவரல்ல நாம்; காங்கிரஸ் கட்சிக்கு இருக்கும் மதிப்பை விட, சோஷியலிஸ்டுகளைப் பற்றிய அபிப்பிராயத்தை விட, இந்து மகா சபைக்குக் காட்டப்படும் ஆதரவை விட, கம்யூனிஸ்டுகளிடம் காட்டப்படும் அக்கறையை விட, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அதிகமாகவே வரவேற்பு இருக்கிறது தென்னாட்டில்! இன்னும் சொல்ல வேண்டுமானால் தென்னாட்டிலேயே சிறந்த பேச்சு வீரர்களையும், சிந்தனையை அள்ளி வீசும் புத்துலகச் சிற்பிகளையும் கொண்டு, கடமை ஆர்வத்துடன்

ஓயாது பாடுபடும் கழகம் நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்று மட்டுந்தான்.

நாம் வளர்ந்திருக்கிறோம், வளர்ந்து கொண்டே இருக்கிறோம். நாம் நீதி, நேர்மைக்காகப் போராடுபவர்கள். கஷ்டங்களைப் புன்சிரிப்போடு ஏற்று, பொதுப்பணி புரிந்து வருபவர்கள். நமது கொள்கைகள் நாட்டின் நலிவைத் தீர்ப்பவை, நல்வாழ்வு தருபவை. கல்லடியும் சொல்லடியும் பட்ட காலத்திலே கரையாதது நமது இயக்கம்-பணக்காரர்களின் செல்வாக்கென்ற ஈட்டிகள் எறியப்பட்ட நேரத்திலே இறந்து போகாத இயக்கம்-மடாதிபதிகளின் எதிர்ப்பு, மகந்துகள் ஜீயர்களின் கொதிப்பு இவைகளால் மாண்டு போகாத இயக்கம்-பதவியும் பட்டமுமே தேவை என்பவர்களின் பாசக் கயிற்றிலிருந்து விடுபட்ட இயக்கம் - சொந்த வாழ்வும் சுயநலமுமே பெரிதென்போரின் பேய்ப் பிடியிலிருந்து தப்பிய இயக்கம் - கொள்கைக்காக வாழ்ந்த நாகை மணியை, மாயவரம் நடராசனை, ஆரூர் வி.எஸ். இராமனை, அழகிரிசாமியை அணைத்திருந்த இயக்கம் - மொழிக்காக உயிர் விட்ட தாளமுத்து நடராசன்களைக் கொண்டிருந்த இயக்கம் - கொள்கைக்காக மரத்திலே பிணமாக ஊஞ்சலாட்டப்பட்ட உடையார்பாளையம் வேலாயுதங்களை உற்பத்தி செய்யும் இயக்கம் - மதுரை மாநாட்டுத் தீயைக் கண்டு மனங்கலங்காத இயக்கம் - குடந்தைத் தெருவினிலே குருதி வெள்ளத்தைக் கண்டு குலை நடுங்காத இயக்கம் - இராம காவியம் இழுக்குடையது என்பதை எடுத்துக்காட்டி பாரதியார்களை, சேதுப் பிள்ளைகளை சொற்போரிலே வெற்றி கண்ட இயக்கம் - ஆறிலும் சாவுதான், நூறிலும் சாவுதான், ஆனது ஆகட்டும் என்று பாடிவரும் ஆயிரமாயிரம் தம்பிகளைப் பெற்றுள்ள இயக்கம் - தம்பிகளின் நெஞ்சைத் தட்டிப் பார்த்து உறுதியானதுதானா இது என்று உணர்ந்து அறப்போருக்கு உரிய காலம் பார்த்திருக்கும் உலக அறிஞர்களில் ஒருவராம் அண்ணாவைப் பெற்றிருக்கும் இயக்கம் - குள்ளநரிக் கூட்டத்தின் குடல் கிழிக்கும் கூற்றம் - குமுறும் எரிமலை புதுவைக் கவிஞர் பாரதிதாசனைப் பெற்றுள்ள இயக்கம் - அன்று முதல் இன்று வரை அடுக்கடுக்கான ஆபத்துகளைத் தாங்கி, அவைகளைத் தாண்டி, நாம் வளர்ந்து வந்துள்ளோம்.

இந்தப் பதினொரு மாதங்களிலே ஐநூறுக்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் - ஆறு மாவட்ட மாநாடுகள் - தினசரி நம் கொள்கைகளை அக்கறையோடு கேட்கிற பல்லாயிரக் கணக்கான மக்கள், யாரால் எந்தக் கட்சியால் இதுபோல முடிந்தது என்கிறார்கள். நம் வளர்ச்சி கண்டு நாமே பூரிக்கிறோம் என்றெல்லாம் இயக்கத்தின் வளர்ச்சி பற்றி கோவில்பட்டி மாநாட்டில் என் தலைமையுரையில் குறிப்பிட்டேன். நீண்ட பேச்சு, முழுவதும் வெளியிட இதில் இடம் போதாது.

மாநாட்டுத் தலைவன் என்ற முறையில் கழகத்தின் அமைப்புகள், சிற்றூர்க் கிளை, நகரக் கிளை, வட்டக் கிளை, மாவட்டக் கிளை, தலைமைக் கழகம் என்கிற அளவில் பரவலாக்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு அமைப்புக்கும் தொடர்பு இருக்க வேண்டுமென்றும், தலைமைக் கழகத்தின் தாக்கீதுகள் பிறப்பிக்கப்பட்ட உடனேயே அவைகள் சிற்றூர்க் கிளைகளுக்குச் சென்றடைகிற அளவிற்கு எல்லா மட்டத்திலும் உள்ள அமைப்புகளுக்கு இடையே ஒரு சங்கிலித் தொடர்பு இருக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டேன். மேலும் தமிழகம் புறக்கணிக்கப்படுவதைச் சுட்டிக் காட்டி, இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதன் அடையாளமாக கழகம் போராட்டங்களை வகுக்க வேண்டுமென்றும் எடுத்துச் சொன்னேன். இறுதியாகப் பேசிய அண்ணா அவர்கள் என் தலைமை உரையில் குறிப்பிட்ட குறைபாடுகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு, நான் கேட்டுக் கொண்டவாறு போராட்டத் திட்டங்களை அந்த மாநாட்டிலேயே வெளியிட்டார். 26 வயதிலே நான் ஆற்றிய என் உரையை பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய திராவிட நாடு இதழில், முதல் பக்கத்தில் என்னுடைய புகைப்படத்தோடு சேர்த்து வெளியிட்டார். அந்த இதழில் வெளிவந்த என் படம்தான் இந்தக் கடிதத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில் திராவிடத்தின் உலகத் தொடர்புகள் என்று தலைப்பு கொடுக்கப்பட்டு, அந்தத் தலைப்பின் மீது நான் பேசினேன். அந்தக் காலத்திலேயே நம்முடைய கழக மாநாடுகளில்தான் இவ்வாறு தலைப்புகள் தரப்பட்டு பேசப்படும். எனக்குத் தந்த தலைப்பின் மீது நான் பேசும் போது, மலேயா ரப்பர் தோட்டங்களில், சிலோன் தேயிலைக் காடுகளில், ஆப்பிரிக்கச் சுரங்கங்களில் திராவிடர்கள் அவதியுறுகிறார்கள்;

விலங்குகளைப் போல் நடத்தப்படு கிறார்கள்; சாக்கடை ஓரங்களில் வசிக்கிறார்கள்; மாடுகளைப் போல் உழைக்கும் கூலிகளாயிருக்கிறார்கள்; அந்தந்த நாடுகளில், கேவலமான நிலைகளுக்கு ஆளாக்கப்பட்டு, உரிமையிழந்து தவிக்கிறார்கள்; கண்ணீர் வடிக்கிறார்கள்; இதுதான் திராவிடத்தின் இன்றைய உலகத் தொடர்பு என்பதுதான் என் பேச்சின் துவக்கம்.

மேலும் அந்தப் பேச்சில், நேற்று வாழ்ந்தோம் - இன்று தாழ்ந்தோம் - நாளை வாழ்வோம் - அதற்காக வாளெடுப்போம்! சூளுரைப்போம்! அதற்காகவே இங்கு திருச்சிதனில் - தீரர்கள் உலவும் பூமியில் - மாநில மாநாட்டில் கூடியிருக்கிறோம் என்றெல்லாம் இரண்டாவது மாநில மாநாட்டில் குறிப்பிட்டேன். இப்போது மாநாடு நடைபெறும் இடம் அதே திருச்சி. அப்போது 1956இல் நான் பேசியது, இப்போதும் பொருந்தி வருவதைப் போல் என் பேச்சு அமைந்திருக்கிறதல்லவா? எனவேதான் இதை நினைவுபடுத்துகிறேன்.

திருச்சியில் நடைபெறும் இந்தப் பத்தாவது மாநில மாநாடு பற்றி தம்பி கவிதைப்பித்தன் எழுதிய அருமையான கவிதை ஒன்றில்,

மனம் நிறைந்த கழகத்தின் மாநாட்டு வரலாற்றில்
நினைவுகளின் கல்வெட்டாய் நிலைக்கவரும் மாநாடு!
முனைமழுங்கிப் போய்விட்ட மூளை மடிப்புகளில்
இனஉணர்வுக்கனல்மூட்டும் எழுச்சிமிகுமாநாடு!
காடுகளாம் முட்புதராய் கள்ளிமண்டிக் கிடந்த மணல்
மேடுகளைச் சீராக்கி, மிகப் புதிய ஊராக்கிப்
பீடுமிகும் இரட்டைமலைப் பின்னணியில், மலைகளுக்கும்
ஈடுதந்தே எழுந்துநின்று எழில்குலுங்கும் மாநாடு!
இருள்மண்ட பம்போல இடர்சூழ்ந்த தமிழ்நாட்டில்
மருள்மண்டும் நிலைமாற்றி மயக்கம்ஒழித்தே, திருச்சிக்
'கருமண்ட பம்'அருகில் கதிரவனின் ஒளியேற்றிப்
பிராட்டியூர் பெருமையினைப் பெறப்போகும் மாநாடு

என்றெல்லாம் வளஞ்செறிந்த வார்த்தைகளால் இந்த மாநாட்டிற்கு மாலை தொடுத்திருக்கிறார்.

---

தீரர்கள் கோட்டம்; திருச்சி

இதே திருச்சி மாநகரில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில், அண்ணா அவர்கள் உரையாற்றும் போது, இந்த மாநில மாநாட்டில் கூடியிருக்கிற நீங்கள், 4000 அடி உயரத்திலே இருக்கிற வால்பாறையிலே இருந்தும், நெடுந்தொலைவிலே இருக்கிற தூத்துக்குடித் துறைமுகப்பட்டினத்திலே இருந்தும், தலைநகரம் என்று கருதப்படும் சென்னை நகரத்திலே இருந்தும், இவை எல்லாவற்றிலும் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டிய சிற்றூர்களிலேயிருந்தும் இலட்சக்கணக்கில் இங்கே திரண்டிருக்கிறீர்கள். நான், நாட்டைப் பார்த்தும், நாட்டை ஆளுகிற ஆட்சியாளர்களைப் பார்த்தும் கொஞ்சம் ஆணவத்தோடு கூட நினைவுபடுத்த விரும்புகிறேன். சென்னையில் நாங்கள் கூட்டிய மாநில மாநாட்டில் ஒரு இலட்சம் மக்கள் கூடினார்கள்; நாங்கள் இப்போது அடைந்திருக்கிற வளர்ச்சியை நீங்கள் காண வேண்டுமானால், திருச்சியில் நடைபெறவிருக்கிற மாநில மாநாட்டில் மூன்று இலட்சம் மக்களை நாங்கள் கூட்டிக் காட்டுகிறோம் என்று நான் அப்போதே கூறினேன். சொல்லிவிட்ட பிறகு, எனக்கே கூடக் கொஞ்சம் சந்தேகம் வந்தது சற்று அதிகமாகக் கூறி விட்டோமோ - என்று! இன்று நாம் பார்க்கிற இடங்களில் எல்லாம் தி.மு.க. தோழர்களைத்தான் பார்க்கிறோம். இந்த மாநில மாநாட்டுப் பெருந்திடலில் மட்டுமல்ல, திடலில் இருந்து திருச்சி கோடி வரை ஆறு, ஏழு மைல் தொலைவில் உள்ள இடங்களில் எல்லாம் - நெடுஞ்சாலைகளில் எல்லாம் நம்முடைய தோழர்கள் நிரம்பியிருப்பதை நாம் காண்கிறோம் என்று குறிப்பிட்டார்.

இரண்டாவது மாநில மாநாட்டிலேயே மூன்று இலட்சம் பேரைக் கூட்டிக் காட்டுகிறோம் என்று நம்முடைய தலைவர் அண்ணா அவர்கள் அப்போதே தெரிவித்துவிட்ட பிறகு, இது பத்தாவது மாநில மாநாடு அல்லவா? பத்து இலட்சம் பேராவது நாம் திரண்டிட வேண்டாமா? நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர்கள் மாவட்டக் கழகக் கூட்டங்களை நடத்திய பிறகு முரசொலியில் தந்திருக்கின்ற செய்தியில் இந்த மாநாட்டில் எங்கள் மாவட்டத்தின் சார்பில் இத்தனை ஆயிரம் பேர் கலந்து கொள்வோம் என்கிறார்கள்; ஒவ்வொரு அணியின் சார்பிலும் அவ்வாறே

தெரிவிக்கிறார்கள். அந்தக் கணக்கை யெல்லாம் சேர்த்தால் பத்து இலட்சம் பேர் திரண்டிட மாட்டீர்களா?

பந்தல் வேலையில் முனைப்பாக ஈடுபட்டிருக்கிற வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி கே.என்.நேரு, தலைவர் பத்து இலட்சம் பேர் என்று சொல்லி விட்டாரே, அதற்கான பந்தலை நாம் அமைக்க வேண்டாமா? என்று முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டாமா? அதற்காகத்தான் அண்ணா கூறியதை எடுத்துக்காட்டிக் குறிப்பிட்டேன்.

மேலும், நம்முடைய பொருளாளர் தம்பி ஸ்டாலின், பந்தல் வேலை நடக்கிறபோதே, திருத்தங்களைச் சொல்ல வேண்டும் என்பதற்காகவே இடத்தைப் பார்வையிட்டுவிட்டு, செய்தியாளர்களிடம் கூறும்போது மாநாட்டின் பந்தல் 1100 அடி நீளமும், அகலம் 600 அடியிலும் அமையும். மேடை அமைப்பு 200 அடிக்கு 80 அடியில்! ஓலை முகப்பு ஒன்று அமைக்கப்படவுள்ளது. கொடிக்கம்பம் தலைவர் கலைஞர் அவர்களின் வயதையொட்டி 90 அடி உயரத்தில் அமைக்கப்பட வுள்ளது. கழகத் தோழர்கள் வாகனங்களை நிறுத்துவதற்கு வசதியாக 100 ஏக்கர் நிலம் தயார் செய்யப்பட்டு வருகிறது. மொத்த மாநாட்டின் பரப்பளவு 200 ஏக்கர். தொண்டர்கள் வருவதற்கு வசதியாக மூன்று பெரிய பாதைகளும், அவர்கள் தங்குவதற்கு 100க்கும் மேற்பட்ட திருமண மண்டபங்களும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இந்த மாநாட்டுப் பந்தலுக்குள் குறைந்தபட்சம் 5 லட்சம் பேரும், பந்தலைச் சுற்றி 5 லட்சம் பேரும் ஆக மொத்தம் இந்த வெற்றி மாநாட்டிற்கு பத்து இலட்சம் பேர் வந்து செல்லும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றெல்லாம் அவரே தெரிவித்துவிட்ட பிறகு நான் அந்த எண்ணிக்கையைக் குறைக்கலாமா? எனவே பத்து இலட்சம் பேர் திருச்சி மாநாட்டில் திரண்டிடுவர் என்பதில் ஐயமில்லை. அந்தப் பத்து இலட்சம் பேரில் நீயும் ஒருவனாக இடம் பெற வேண்டாமா? அதற்கு ஆயத்தமாகி விட்டாயா என்பதை நினைவூட்டுவது என் கடமை அல்லவா? இன்று ஜனவரி 12ஆம் தேதி! அடுத்த பிப்ரவரி 15ஆம் தேதி மாநாடு! இன்னும் ஒரே திங்கள்தான்!

அன்புள்ள,

மு.க.

## திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (4)

**உடன்பிறப்பே,**

கழகம் நடத்திய மாநாடுகளை - ஒவ்வொரு மாநாட்டிற்கும் தலைமையேற்று நடத்தியவர்களை, மாநாட்டுத் திறப்பாளர்களை, அவர்கள் ஆற்றிய எழுச்சிமிகு உரைகளைத் தொகுத்தாலே கழக மாநாடுகளின் வரலாறு குறித்த மிகப் பெரிய நூலாகும். திருச்சியில் இரண்டாவது மாநில மாநாட்டை 1956இல் நடத்திய கழகம், மூன்றாவது மாநில மாநாட்டை மதுரையில் 1961ஆம் ஆண்டு ஜூலை 13, 14, 15, 16 ஆகிய நாட்களிலும், நான்காவது மாநில மாநாட்டை சென்னையில் 1966ஆம் ஆண்டு டிசம்பர் 29, 30, 31 ஜனவரி 1 ஆகிய நாட்களிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் நடத்தியது. மதுரையில் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற மூன்றாவது மாநில மாநாட்டை அருமை நண்பர் முத்து அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடத்தினார். மாநாட்டின் திறப்பாளர் திரு. கே.ஏ. மதியழகன், கழகத்தின் பொருளாளர் என்ற முறையில் நான் அந்த மாநாட்டின் பொருளாளராக இருந்தேன்.

மாநாட்டின் முதல் நாள் இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் நடித்த **தென்பாண்டி வீரன்** நாடகமும், இரண்டாம் நாள் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி நடித்த **தமிழ் வாழத் தலை கொடுத்தான்** நாடகமும், மூன்றாம் நாள் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடித்த **சுமை தாங்கி** நாடகமும் நடைபெற்றன. மதுரையில் நடைபெற்ற அந்த மூன்றாவது மாநில மாநாட்டில், விடுதலை வேட்கை என்ற தலைப்பில் நான் உரையாற்றினேன். அந்த மாநாட்டிற்குச் சிறப்புப் பார்வையாளராக வந்திருந்த கர்நாடக மாநில உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி

திரு. மேடப்பா அவர்கள் தி.மு. கழகத்தைப் பற்றி ஆங்கிலத்திலே சிறப்பானதோர் உரையாற்றினார். அந்த மாநாட்டில் கழகப் பொருளாளர் என்ற முறையில் நிதி வசூல் பற்றி தெரிவித்து எனக்குத் தரப்பட்ட தலைப்பின் மீது உரையாற்றினேன். அண்ணா அவர்கள் பேசும்போது, தேர்தல்கள் பற்றியும் கூட்டணி பற்றியும் குறிப்பிட்டது முக்கியமானதாகும். அது வருமாறு :-

தேர்தல்கள், மிக முக்கியமானவைதான்; அதற்காகத் தேர்தல் நன்மையைக் கருதி எந்தக் கட்சியும், தனது அடிப்படைக் கொள்கைகளை விட்டுவிட முடியாது. 1956ஆம் ஆண்டில் திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டில் கூடியிருந்த மக்கள், தி.மு.கழகம் தேர்தலில் கலந்து கொள்ள வேண்டும் என முடிவு செய்தனர். கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, 17 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று, 15 உறுப்பினர்களை சட்டசபையில் வீற்றிருக்கச் செய்தது. தி.மு. கழகம் எதிர்க்கட்சியாக இருந்து ஆற்றி வந்திருக்கும் அரும்பணிகள் அனைத்தையும், நடுநிலையாளர் அனைவரும் நன்குணர்வர். சட்டமன்றத்தில் நம்மவர் ஆற்றியுள்ள பணிகள் மக்களின் நன் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. கழகம், தனது பாராளுமன்றப் பணியைத் தொடர்ந்து நடத்துவது என்ற முடிவுக்கு வந்துள்ளது. அடுத்துவரும் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தனது கொள்கையை முன் வைத்துப் போட்டியிடும்;

என்றெல்லாம் அந்த மாநாட்டின் முன்னுரையாகத் தெரிவித்ததோடு, நீண்ட நேரம் இன்று உங்களுக்கு நல்லுரையாற்றும் நிலையில் நான் இல்லை. நான் இங்கு உங்கள் முன் நின்று பேசிக் கொண்டிருக்கிறேன். ஆனால், என் உள்ளமும் நினைப்பும் அண்மையில் திருச்சி - தஞ்சை மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளக் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றிய நினைவாகவே இருக்கிறது. நான் விரைவில் அங்கு செல்ல வேண்டியவனாக இருக்கிறேன். எனவே, எனது உரையை முடிப்பதற்கு முன்பு நீங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன கொடுக்கப் போகிறீர்களோ, அதைப் பெற்றுக் கொண்டுதான் அங்கு செல்லப்போகிறேன். அது நாம் அளிக்கும் முதல் உதவியாக இருக்கக்கூடும்.

மக்களின் இன்பதுன்பமே நமது நோக்கமாகவும், கவலையாகவும் இருந்து வருகிறது. தஞ்சைப் புயல் நிவாரண நிதிக்குத் தம்பி கருணாநிதி எடுத்துக் கொண்ட முயற்சியை நாம் மறக்க முடியாது. இருபத்து ஐயாயிரம் ரூபாய் திரட்டித் தந்தார். வேட்டி, புடவையாக இவைகளை அளித்தோம். இப்பொழுதும் நாம் நமது கடமையை நமது மக்களுக்காகச் செய்ய வேண்டி வந்துள்ளது. வெள்ள நிதிக்கு நிதி அளிப்பவர்கள் உடன்வந்து என்னிடம் அளிக்கலாம் என்றெல்லாம் உரையாற்றினார். (பூம்புகார் பதிப்பகம் வெளியிட்டுள்ள பேரறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள் என்ற நூலில் அண்ணா அவர்களின் இந்தப் பேச்சு இடம் பெற்றுள்ளது).

மதுரை, திருப்பரங்குன்றத்தில் 1961ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது மாநில பொது மாநாட்டிற்கும், 1966ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது மாநில பொது மாநாட்டிற்கும் இடையில் தி.மு. கழகத்தின் சார்பில் 20 மாநாடுகள் - 8 மாவட்ட மாநாடுகள்; 5 இந்தி எதிர்ப்பு மாநாடுகள்; 3 மாணவர் தி.மு.க. மாநாடுகள்; 3 வட்டார தி.மு.க. மாநாடுகள்; 1 தேர்தல் சிறப்பு மாநாடு என்ற பெயர்களில் நடைபெற்றன. நான்காவது மாநில பொது மாநாடுதான் விருகம்பாக்கத்தில் நடைபெற்ற மாநாடு. 1967 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பாக நடைபெற்ற மாநாடு அது. திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டிற்கு மிகச் சிறப்பான இடம் உண்டு. அண்ணா அவர்கள் தலைமை தாங்கிய அந்த மாநாட்டினைத் திறந்து வைத்து உரையாற்றிடும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டிருந்தது. கொடியேற்றிடும் பொறுப்பு காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

கழகத்தின் வளர்ச்சிக்கென தங்கள் உயிரையே காணிக்கையாக்கிய தீரமறவர்களின் நினைவாக உருவாக்கப்பட்ட தியாகிகள் கோட்டத்தினை சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு திறந்து வைத்தார். கலைக் கண்காட்சியினைத் திறந்து வைத்திடும் பொறுப்பை திரு. ஏ. கோவிந்தசாமி ஏற்றிருந்தார்.

அந்தப் பொது மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக சென்னைத் தீவுத் திடலை விட்டுப் புறப்பட்ட அன்றைய ஊர்வலத்தில் ஏறத்தாழ மூன்று

இலட்சம் பேராவது கலந்து கொண்டிருப்பர். அது சென்றிட்ட பாதையின் இரு மருங்கிலும் மாடிக் கட்டிடங்களிலும் மரக்கிளைகளிலும் அமர்ந்த வண்ணம் அதன் அணிவகுப்பு மாட்சியைப் பார்த்துக் களித்திட்டோர் எண்ணிக்கையோ பல இலட்சம் இருக்கும். மாநாட்டின் பொறுப்பாளர் நாவலர்; வரவேற்புக் குழுத் தலைவர் - நான் அன்பொழுக நீலம் என்று அழைக்கின்ற நீலநாராயணன் - செயலாளர்கள் மன்னை ப.நாராயணசாமி, ஈ.ஆர். கிருஷ்ணன், சி.வி.எம். அண்ணாமலை, கோ. செங்குட்டுவன் (இவர் யார் தெரியுமா? தற்போது நாடாளுமன்றக் கழகக் குழுவின் தலைவராக இருக்கும் தம்பி டி.ஆர். பாலுவின் மாமனார் தான்) - தொண்டர் படைத் தலைவர் கே.எம். கண்ணபிரான் (கவிஞர் வேழவேந்தனின் மாமனார்) - தொண்டர் படைத் தலைவர்கள் சு. பாலன், எஸ்.வி. வேலு, நல்லதம்பி, சாகுல் அமீது, அலமேலு அப்பாதுரை.

பிற்பகல் 3.30 மணிக்குத் தொடங்கிய ஊர்வலம் இரவு 9.30 மணிக்குத்தான் போளூர் சுப்பிரமணியம் பெயரில் அமைந்த மாநாட்டுப் பந்தலை அடைந்தது. தினமணி நாளேடு அப்போதெல்லாம் நடுநிலை நாளிதழாக இருந்தது. அது அந்த ஊர்வலத்தைப் பற்றி எழுதும்போது, சென்னை நகரில் தி.மு.க.வின் செல்வாக்கு எவ்வளவு என்பதைப் பற்றி வாக்குப் பெட்டிகள்தாம் தீர்ப்பளிக்க முடியும். பிப்ரவரி (1967) கடைசி வாரத்தில் அந்தத் தீர்ப்பு தெரிந்து விடும். ஆனால் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு தீர்ப்பளிக்க முடியுமென்றால் நகரில், தி.மு.க. வெற்றி பெற்று விட்டது என்று சொல்லி விடலாம். அவ்வளவு பிரும்மாண்டமான முறையில் ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்று தெரிவித்திருந்தது.

அந்த மாநாடு நடைபெறுவதற்கு ஒரு திங்களுக்கு முன்பு, மாவட்டங்கள் தோறும் நடைபெற்ற தேர்தல் நிதியளிப்புக் கூட்டங்களில் பகல், இரவு பாராது, ஊண் உறக்கத்தை அறவே மறந்து சுற்றிக் கொண்டிருந்தேன். அப்போது எனக்கு அந்த அலைச்சலோ அதனால் சாதாரணமாக ஏற்படும் களைப்போ சிறிதும் தெரியவில்லை. ஆனால் தற்போது நம்முடைய பொருளாளர் தொடர்ந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது, அய்யோ!

இப்படி அலைகிறானே என்றுதான் நினைக்கத் தோன்றும். அந்தக் கூட்டங்களை முடித்து விட்டு நான் சென்னைக்குத் திரும்பினால், திரும்பிய அரைமணி நேரத்திற்குள்ளாக அண்ணாவின் அருகிலே இருப்பேன்.

ஒரு முறை அப்படித்தான். அவரைச் சந்திக்கச் சென்ற என்னிடம் ஏறு, காரிலே என்றார். எங்கே அண்ணா, எதற்கு அண்ணா? என்றெல்லாம் கேட்கவில்லை, அப்படிக் கேட்டுப் பழக்கமும் இல்லை. அண்ணாவே தொடர்ந்தார். மாநாட்டுக்காக ஓர் இடத்தைப் பார்த்து வைத்திருக்கிறேன். அதை உனக்கு காட்டிவிட வேண்டும் என்று நினைத்தேன். அங்கேதான் இப்போது நாம் போகிறோம் என்றார் அண்ணா. மாநாட்டிற்காகப் பார்த்து அண்ணாவே தேர்ந்தெடுத்த இடத்தை என்னிடம் கொண்டு போய் காட்ட வேண்டும் என்பதற்காக அண்ணா என்னை அழைத்துச் சென்றாரே, அந்த நினைவே தற்போது என்னைக் கலங்க வைக்கிறது; கதறி அழ வேண்டும் போலத் தோன்றுகிறது! காரில் சில மைல்கள் கடந்த பிறகு, நின்றது. அண்ணா இறங்கினார். அது ஆள் நடமாட்டமே இல்லாத ஒரு பரந்த வெளி. அதைக்காட்டி, இதுதான் மாநாட்டிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் என்றார். எனக்கே சற்று மலைப்பாக, திகைப்பாக இருந்தது. பார்க்கும் இடம் எல்லாம் பள்ளங்கள், மேடுகள், குன்றின் முகடுகள் போல் கற்களின் குவியல்கள். இடையிடையே மரம், செடி, கொடி, கள்ளிப் புதர்கள்! இங்குதான் மாநாட்டை நடத்தியாக வேண்டும். இந்த இடம் மாநாடு நடைபெறுவதற்குரிய எழிலான பூமியாக மாற வேண்டும் என்றார் அண்ணா. பிறகென்ன?

அண்ணா ஆணையிட்டு விட்ட பிறகு, அதற்கு அட்டியேது? தயக்கம் ஏது? கழகத் தோழர்களின் கடின உழைப்பால், அந்த இடம் ஒரு சில நாட்களில் நீலமேகம் நகர் ஆகியது. அதுபற்றி மாநாட்டில் நான் குறிப்பிடும்போது, நண்பர்களே! காடாகக் கிடந்த இந்த இடத்தை - கருநாகங்கள் ஊர்ந்து கொண்டிருந்த இந்த இடத்தை - தொட்டால் தேளும், தீண்டினால் நட்டுவாக்கிளியும் வரவேற்றுக் கொண்டிருந்த இந்த இடத்தை பதினைந்தே நாட்களில் எழில் மிக்க பூமியாக, நீங்கள் எல்லோரும் அமர்ந்து களிக்கும் இடமாக, மாநாட்டுப் பந்தலாக

மாற்றியிருக்கிறோம். இதே நேரத்தில் அறிஞர் அண்ணா ஆணையிட்டால் நடைபெறும் ஆட்சியினால் காடாகிப் போய்விட்ட இந்த நாட்டை, ஏன் எழில் மிக்க பூமியாக மாற்ற முடியாது என்று என்னரும் நண்பர்களே, நீங்களே ஒரு முறை கேட்டுப் பாருங்கள்! நீங்கள் கேட்கின்ற அந்தக் கேள்விகளின் எதிரொலி நாடாளுவோரின் செவிப் பறைகளைத் தட்டட்டும், அவர்கள் எல்லாம் நம் காலம் முடிவடைந்து விட்டது என்ற கணக்கைப் பார்த்துக் கொள்ளட்டும், பிரிவுபசாரப் பத்திரத்தை தமிழ்நாட்டு மக்களிடமிருந்து வாங்கிக் கொள்ள அவர்கள் தயாராகிக் கொள்ளட்டும் என்றெல்லாம் குறிப்பிட்டேன்.

தி.மு. கழக மாநாடு என்ற போதிலும், அதில் மூதறிஞர் இராஜாஜி, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., கேரள மாநிலத் தலைவர்களான முகமது கோயா, தங்கல் ஆகியோரும் கலந்து கொண்டு பெருமை சேர்த்தனர். அந்த மாநாட்டில் ராஜாஜி பேசும்போது, இந்த அணி நிச்சயம் வெற்றி பெறும். எனது வாழ்நாளில் எனது கட்சியை அல்லது கூட்டத்தைச் சேராத மக்கள் என்னிடம் இவ்வளவு பற்று வைத்திருப்பதை நான் பார்த்ததே கிடையாது. அதை நான் இப்போது என் கண் முன்னால் காண்கிறேன். தி.மு.க. தம்பிகளுக்கும் அவர்களது பேரன்மார்களுக்கும் எனது மனப்பூர்வமான ஆசி என்றார்.

அந்த விருகம்பாக்கம் மாநாட்டில்தான், கழகப் பொருளாளர் என்ற முறையில் பொதுமக்களிடமிருந்து திரட்டிய தேர்தல் நிதி பதினொரு இலட்சம் ரூபாயை அண்ணா அவர்களிடம் அளித்திடும் பெரும் பேற்றினைப் பெற்றேன். இதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில், தேர்தல் நிதிக்கென வகுத்துக் கொள்ளப்பட்ட இலக்கு பத்து இலட்சம் ரூபாய்தான். அதனையே முழுமையாகத் திரட்டிட முடியுமா என்று நானே நெஞ்சம் குழம்பிய நேரங்களும் உண்டு. ஆனால் அந்த இலக்கையும் தாண்டி ஒரு இலட்சம் கூடுதலாகவே அண்ணாவிடம் சேர்த்தேன். அதைப்பற்றி அண்ணா அவர்களே மாநாட்டில் வேட்பாளர்களை அறிவிக்கும்போது குறிப்பிட்டார். பதினொரு இலட்சம் ரூபாயை, தம்பி கருணாநிதி என்னிடம் தந்தார். அவர் பேசும்போது, அந்தத் தொகையைச் சேர்க்க முடியுமா? என்று தன்

விழிகள் வியப்பால் விரிந்தன என்றார். தம்பீ! உனக்கு நிதி என்று பெயரிட்டார்களே உன் தாயார், சும்மாவா வைத்தார்கள்? தமிழ் மொழியில் உள்ள சொற்கள் பொருள் உள்ளவை என்பதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன். உன் தாயார் உனக்கு நிதி என்று பெயரிட்டதே, உன்னை நாட்டு மக்கள் நிதியாகப் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்றுதான். இன்றைக்கு இந்தக் காட்சியைப் பார்க்க நேர்ந்திருந்தால், உனக்கு இட்ட பெயர் வீணாகி விடவில்லை என்று உன் தாயார் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பார்? பத்து லட்சம் ரூபாய் கேட்டதற்கு பதினொரு இலட்சமே கொடுத்திருக்கிறாய்! ஆனால் மக்கள் சிக்க வேண்டிய நேரத்தில் உன்னிடம் சிக்கியிருந்தால் நீ இன்னமும் அதிகம் சேர்த்திருப்பாய் என்று அண்ணா அவர்கள் கூறியதோடு நின்றிடவில்லை.

1967 பிப்ரவரி திங்களில் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலில் போட்டியிட தேர்ந்தெடுக்கப்பட்ட கழக வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்ட போது, மற்ற வேட்பாளர்களைப் பொறுத்தமட்டில் அந்தந்தத் தொகுதிகளைக் குறிப்பிட்டு, அவைகளுக்குரிய வேட்பாளர்களின் பெயர்களைச் சொல்லி வந்த அண்ணா, சைதாப்பேட்டை. . . என்று சொல்லி விட்டு கணப் பொழுது அமைதியாக இருந்தார். பின்னர் பதினொரு இலட்சம் என்றார். அந்த மாநாட்டுப் பந்தலிலே இருந்த அத்தனை பேரும் எழுந்து கரவொலி எழுப்பினர். அது நான் திரட்டிய நிதிக்காக அல்ல, அதை பேரறிஞர் அண்ணா அவர்கள் தன் நெஞ்சார அவருக்கே உரிய தனித் தன்மையோடு பாராட்டியதற்காக! இப்படி எத்தனை எத்தனையோ நினைவுகள் அலைஅலையாக வந்து என்னை நெகிழச் செய்கின்றன! அனைத்தையும் விவரித்திட இங்கே இடம் போதுமா?

கழகம் நடத்திய அந்த நான்காவது பொது மாநில மாநாடே மாபெரும் வெற்றி மாநாடாக மாறியது. தேர்தலில் தி.மு. கழகம் மாபெரும் வெற்றியைப் பெற்று, தமிழகத்தில் மாற்றத்திற்கு வித்திட்டு, ஆட்சிக் கட்டிலில் ஏறிட காரணமான மாநாடாகவும் அமைந்தது. ஆனால் அந்த நான்காவது மாநில மாநாடுதான் அண்ணா

அவர்கள் கலந்து கொண்ட கடைசி மாநாடு என்பது எங்களுக்கு அப்போது தெரியாமல்தான் போய்விட்டது.

நடைபெற்ற நான்காவது மாநில மாநாட்டைப் பற்றியே கூறிக் கொண்டிருந்தால், நடைபெற வேண்டிய பத்தாவது மாநில மாநாடு என்ன ஆவது? பத்தாவது மாநில மாநாட்டின் பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டுதான் உள்ளன. தம்பி நேரு கடந்த வாரம் சனிக்கிழமை அன்று பந்தல் சிவாவையும், ஓவியர் ஜெ.பி. கிருஷ்ணாவையும் நேரிலேயே அழைத்துக் கொண்டு என்னிடம் வந்துவிட்டார். பந்தலைப் பல்வேறு கோணங்களில் புகைப்படங்களாக எடுத்து ஆல்பம் தயாரித்துக் கொண்டு வந்து காட்டினார். காலையிலேயே வந்து விட்டதாகவும், பொருளாளருடன் அமர்ந்து மாநாட்டில் பணியாற்றிடுவதற்கான பல்வேறு குழுக்களில் யார் யாரை இடம் பெறச் செய்யலாம் என்பதற்கான பட்டியலையும் என்னிடம் காட்டி ஒப்புதல் பெற்றார். வரவேற்புக் குழு என்றும், நிதிக் குழு என்றும், தீர்மானக் குழு என்றும், மலர்க் குழு என்றும், உபசரிப்புக் குழு என்றும், பிரச்சாரக் குழு என்றும், பந்தல் குழு என்றும், மேடைக் குழு என்றும், அலங்காரக் குழு என்றும், விளம்பரக் குழு என்றும், தொண்டர் அணி என்றும், மகளிர் அணி என்றும், மகளிர் தொண்டர் அணி என்றும், மாநாட்டு அலுவலகப் பொறுப்பாளர்கள் என்றும் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முரசொலியில் வெளியிடப் பட்டுள்ளன. அந்தந்தக் குழுக்களிலே இடம் பெற்றவர்கள் தங்கள் பணிகளை திறம்படச் செய்திடுவர் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

மாநாட்டு ஏற்பாடுகள் எல்லாம் நான் செய்தியாளர்களிடம் கூறியது போல, சிறப்பாகவும், முறையாகவும் நடைபெற்று வருகின்றன. வரவேற்புக் குழுத் தலைவர் கே.என்.நேரு பந்தலைச் சுற்றிப் பார்த்து வர, மோட்டார்சைக்கிளில் புறப்படுவதைப் பத்திரிகைகளில் வெளிவந்த படங்களிலேயே பார்த்திருப்பாயே; அந்த அளவிற்கு பந்தல் நீளமாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். மாநாட்டிற்கு முன்பாக என்னை ஒரு முறை ஏற்பாடுகளைப் பார்க்க திருச்சிக்கு வரவேண்டுமென்றார்! அண்ணனுக்கு அறுபது வயது என்று அவருக்கு நினைப்பு? தம்பிகளின் பணியிலே சந்தேகம் இருந்தால்தானே

முன்கூட்டிச் சென்று பார்க்க வேண்டும்! மாநாட்டு ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெறும் நேரத்தில் உன்னுடைய வருகையை நம்பி, பத்து இலட்சம் பேர் திரளுவார்கள் என்று அறிவித்திருக்கிறோம். எனவே உன் பயணத்தில் எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் பார்த்துக்கொள்! திருமண அழைப்பிதழ்களில்தான், குடும்பத் தினரோடும், உற்றார் உறவினர்களோடும், நண்பர்களோடும் முன்கூட்டியே வந்திருந்து சிறப்பிக்க வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டு அழைப்பார்கள். நான் மாநாட்டிற்காக அழைக்கிறேன். குடும்பத்தினரோடும், உற்றார் உறவினர்களோடும், நண்பர்களோடும் முன் கூட்டியே வந்திருந்து இரண்டு நாள் மாநாட்டினையும் வெற்றிகரமாக நடத்திடப் பெரிதும் விரும்பி அழைக்கிறேன்!

அன்புள்ள,

மு.க.

## திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (5)

**உடன்பிறப்பே,**

அண்ணா அவர்கள் இருந்து மிகவும் வெற்றிகரமாக நடத்திய விருகம்பாக்கம் மாநாட்டினைப் பற்றி கடந்த வாரம் விரிவாக விளக்கியிருந்தேன் அல்லவா? அண்ணா அவர்கள் நம்மை விட்டு மறைந்த பிறகு 1970ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் - இதே திருச்சியில்தான் திருச்சி மாவட்ட ஐந்தாவது தி.மு.க. மாநாடு சிறப்பாக நடைபெற்றது. அந்த மாநாட்டில் நான் ஆற்றிய உரையின் தொடக்கம் இப்படித்தான் அமைந்தது!

கழகக் கண்மணிகளே! அருமைத் தாய்மார்களே! பெரியோர்களே! பேரறிஞர் அண்ணா அவர்களே! . . . என்று அழைத்துப் பேச்சைத் தொடங்கிட வேண்டிய நான், இன்று அந்த அண்ணன் எங்கே? எங்கே? என்று தேடுகிற நிலைமையில் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

தம்பீ வா! தலைமையேற்க வா! என்று அழைத்து ஆணையிட்டதும், கேட்டு ஓடிவந்த நாவலர், இங்கே அமர்ந்திருக்கிறார், அழைத்து ஆணையிட்ட நீ எங்கே போய்விட்டாய்?

மதியழகனுக்கு எப்போதுமே பிடிவாதக் குணம் அதிகம்; ஆனாலும் தான் நினைத்ததைப் பேசி நம்மைக் கவர்ந்து தன் பக்கம் இழுக்கத் தவறமாட்டார் என்று அடிக்கடி புகழ்வீர்களே அண்ணா! அந்தப் பிடிவாதக்கார மதியழகன் இங்கே அமர்ந்திருக்கிறார்; அவரைப் பிரிந்து எங்கே அண்ணா சென்று விட்டீர்கள்?

சிற்றரசு பேசினால் நான் குலுங்கக் குலுங்கச் சிரித்து விடுகிறேனடா தம்பீ! என்று சிரிப்பீர்களே அண்ணா; அந்தச் சிற்றரசு இங்கே எங்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க

வைத்தபோது, அதை ரசிக்காமல் எங்கே போய் விட்டீர்கள் அண்ணா?

பக்கத்தில் என்.வி.என். அமர்ந்து, வெற்றிலை மடித்துத் தர, அதை வாங்கி வெற்றிச் சிரிப்போடு வாய் குழையக் குழையப் போட்டுக் கொள்வீர்களே, அண்ணா! வெற்றிலை மடித்துத் தர இங்கே என்.வி.என். இருக்கிறார், வெற்றிகளைத் தந்த எங்கள் அண்ணனே, நீ எங்கே போய்விட்டாய்?

ஆழமாகச் சிந்திப்பதும் - அமைதியாக இருப்பதும் - ஆணித்தரமாக வாதிடுவதும் அன்பழகனின் இயல்பு எனப் பாராட்டுவீர்களே அண்ணா - அந்தப் பேராசிரியர் இங்குள்ளார்; பெருமை மிகு அண்ணனே! நீ எங்கே போய்விட்டாய்?

என்ன முத்து? கோபமாக வருகிறாயா? உட்கார்! என்று புன்னகை தவழச் சொன்னதும், கோபத்தை எல்லாம் மறந்துவிட்டுக் குளிர்ந்த முகத்தோடு எதிரே அமர்வாரே; அந்த மதுரை முத்து இந்த மாநாட்டிலே இருக்கிறார்; ஆனால் அவரைக் குளிரவைக்கும் அண்ணனே; நீ எங்கே போய்விட்டாய்?

மன்னை, மன்னார்குடிக்கு வர வேண்டாமென்று கருணாநிதிதான் சொல்கிறான், என் மேல் குற்றமில்லையப்பா என்று குறும்பு செய்வீர்களே, அந்தக் குறும்பைத் தாங்கிக் கொள்கிற மன்னை நாராயணசாமி இங்கே இருக்கிறார், அண்ணனே, எங்கே போய்விட்டாய்?

அன்பில்! எங்கே கொஞ்சம் கண்ணைக் காட்டு என்று கண்ணைக் காட்டச் சொல்லி குமிழ்க் கண்களைப் பார்த்து ரசிப்பீர்களே, அந்தக் கண்ணைக் காட்ட நம்முடைய அன்பில் இங்கே இருக்கிறார். அண்ணனே, கண்மூடி நீ எங்கே போய்விட்டாய்?

சென்று வா தம்பீ; வென்று வா தம்பீ என்று கல்லக்குடிப் போராட்டத்திற்குச் சிதம்பரத்திலே என்னை வழியனுப்பி வைத்தீர்களே, அண்ணா! சென்று வந்திருக்கிறேன்; வென்று வா என்று சொன்ன நீங்கள் எங்கே போய் விட்டீர்கள்? எங்கே போய்விட்டீர்கள்? என்று கேட்டுத்தான் இந்த மாநாட்டிலே பேரறிஞர் அண்ணா அவர்களே என்று நான் அழைக்கிறேன்.

எனக்கு நம்பிக்கை உண்டு. இங்கேயிருக்கிற எங்களுக்கெல்லாம் நம்பிக்கை உண்டு. அண்ணா நீ இங்கேதானிருக்கிறாய். இந்தப் பேச்சை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறாய். இந்த ஆரவாரத்தைக் காணுகிறாய். இங்கே இருக்கின்ற உன்னுடைய அருமைத் தங்கைகளையெல்லாம் பார்க்கிறாய். தம்பிகளின் பட்டாளங்களைக் காணுகிறாய். மலர் போன்ற மழலைக் குழந்தைகளின் இதழ் ஓரத்தில் முத்தமிடுகிற அண்ணனே, நீ எங்கும் போகவில்லை, இங்கேதான் இருக்கிறாய்! இங்கேதான் இருக்கிறாய்! எங்களுடைய நெஞ்சங்களில்தான் இருக்கிறாய் அண்ணனே! இங்கே தான் இருக்கிறாய்!

ஒவ்வொரு மாநாட்டிலும் கழகத்தினுடைய பொருளாளர் என்கிற முறையில் நான் கணக்குகளை எல்லாம் ஒப்படைக்க மாநாட்டு மேடைக்கு வர; எவ்வளவு வசூல் என்று அண்ணா கேட்க - சொல்ல முடியாது, அது சஸ்பென்ஸ் என்று அவரிடத்தில் நான் சொல்ல - சும்மா சொல், நான் வெளியே சொல்ல மாட்டேன் என்று அவர் வேடிக்கை பேச - பக்கத்தில் இருக்கிற ப.உ. சண்முகம் வசூலை அவரிடம் சொல்லிவிட - பார்த்தாயா, பார்த்தாயா, உன்னுடைய நண்பனே சொல்லிவிட்டான் என்றெல்லாம் கேலி பேசுவாரே, அந்த அண்ணன் மேடையில் நின்று பேசுகின்ற அந்த எழில் ஓவியத்தைக் கண்டு கண்டு களித்து வந்த நான் இன்றையதினம் அந்த இடத்திலே நின்று பேசுவது என்றால் என்னுடைய உடல் எல்லாம் நடுங்குகிறது! என்னுடைய உள்ளமெல்லாம் குமுறுகிறது! என் கண்கள் குளமாகின்றன! தாயை இழந்த நேரத்திலே - தந்தையை இழந்த நேரத்திலே எனக்கு ஏற்படாத கவலையை நான் கல்லறைக்குச் செல்கிற வரையில் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார் என்னுடைய அண்ணன்! அண்ணாவிற்குப் பிறகு இந்தப் பெரிய பொறுப்பினை என்னுடைய தோள்களிலே சுமத்தி வைத்திருக்கின்ற கழகத்தின் தங்கங்களே! உங்களை யெல்லாம் நம்பித்தான் நான் இங்கே அமர்ந்திருக்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் எனக்கு அண்ணனாகத் தெரிகிறீர்கள். அண்ணன் ஒருவன் இருந்து எனக்கு வழங்க வேண்டிய ஆறுதலை - எனக்குத் தர வேண்டிய அறிவுரையை நான்கு கோடி தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நீங்கள் எனக்குத் தந்து கொண்டிருக்கிறீர்கள்.

இப்படித்தான் கண்ணீரோடும் கவலையோடும் கனத்த இதயத்தோடும் அந்த திருச்சி மாவட்ட மாநாட்டிலே என்னுடைய பேச்சினைத் தொடங்கினேன். அதன் பின்பு, 1971ஆம் ஆண்டு ஜனவரி 24 அன்று சென்னை அசோக் நகரில் கழகத்தின் தேர்தல் சிறப்பு மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் நான் பேசுவதற்கு முன்பு வரை, இந்திரா காங்கிரசுடன் தேர்தல் கூட்டணி வருமென்று எதிர்பார்த்திருந்து, பேச்சுவார்த்தை வெற்றி பெறாத நிலையில் இந்திரா காங்கிரஸ் சார்பில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட காரணத்தால், நானும் என் பேச்சின்போது கழகத்தின் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுவிட்டேன். ஆனால் இரவு பன்னிரெண்டு மணி அளவில் டெல்லியிலிருந்து பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரும், திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களும் பேசிய பிறகு, காங்கிரஸ் கட்சி சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதில்லை என்றும், பத்து நாடாளுமன்றத் தொகுதிகளில் மட்டும் போட்டியிடுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது. அந்தத் தேர்தலில் தி.மு. கழகம் 184 இடங்களிலும், தோழமைக் கட்சிகளான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 8 இடங்களிலும், பார்வர்டு பிளாக் 7 இடங்களிலும், பி.சோ. கட்சி 4 இடங்களிலும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் 6 இடங்களிலும், தமிழரசுக் கழகம் ஒரு இடத்திலும் வெற்றிபெற்றது. தி.மு.கழகம் பெற்ற இந்த வெற்றி தமிழகச் சட்டப்பேரவைத் தேர்தலில் இதுவரை எந்தக் கட்சியும் பெறமுடியாத மாபெரும் வரலாற்றுச் சாதனையாகும்.

தி.மு. கழகத்தின் ஐந்தாவது பொது மாநில மாநாடு 1975ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெறுவதற்கு முன்பாக அதே ஆண்டு நவம்பர் 15, 16 ஆகிய நாட்களில் தி.மு. கழக மகளிர் மாநில மாநாடு மதுரை தமுக்கம் திடலில், வெற்றிச் செல்வி அன்பழகன் பந்தலில், சரஸ்வதி கந்தசாமி அரங்கில், பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி இராணி அண்ணா அவர்கள் தலைமையிலே நடைபெற்றது. மாநாட்டினைப் பொற்செல்வி இளமுருகு துவக்கி வைத்தார். மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் படத்தினை ஈ.வெ.ரா. மணியம்மையார் அவர்களும், டாக்டர் தர்மாம்பாள் படத்தினை திருமதி பூங்கோதை அவர்களும் திறந்து வைத்தார்கள்.

வரவேற்புக்குழுத் தலைவர் அலமேலு அப்பாத்துரை; மாநாட்டுப் பொருளாளர் தமிழரசி, எம்.எல்.சி. ; மாநாட்டுச் செயலாளர்கள் தேவகி பாண்டியன், சக்தி கோதண்டம், அமுதா ராகவன், எஸ்.பி. சற்குணம்; தொண்டர் படைத் தலைவி மதுரை அனுசுயா.

மகளிர் மாநாட்டினைத் தொடர்ந்து கழகத்தின் ஐந்தாவது பொது மாநில மாநாடு கோவை மாநகரில் 75ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதி வாரத்தில் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுத் திறப்பாளர், பொதுச் செயலாளர் நாவலர். கழகத் தியாகிகளின் படத் திறப்பாளர் பேராசிரியர் அன்பழகன். அந்த மாநாட்டில் தம்பி மு.க. ஸ்டாலின் நடித்த வெற்றி நமதே நாடகமும், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். நடித்த சந்திரமோகன் நாடகமும், கழகப் பேச்சாளர்கள் நடித்த அவன்தான் எங்கள் இறைவன் என்ற நாடகமும் நடைபெற்றன. இப்படி, மாநாடு என்றாலே தி.மு. கழகத்திற்கு என்று ஒரு நீண்ட பண்பாட்டு-கலாச்சாரப் பின்னணி உண்டு.

திருச்சியிலே தற்போது பிப்ரவரித் திங்களில் நடைபெறவுள்ள பத்தாவது மாநில மாநாட்டினையொட்டி ஒன்றரை மாதங்களுக்கு முன்பே மாநாடு நடைபெறுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, பந்தல் அமைக்கின்ற வேலையும் தொடங்கி நடைபெற்று வருகிறது. மாநாட்டுப் பணிகளைக் கழகப் பொருளாளர் நேரில் சென்று பார்வையிட்டது பற்றி நான் ஏற்கெனவே எழுதி யிருந்தேன். அதைத் தொடர்ந்து அன்றாடம் திருச்சியைச் சுற்றியுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்கள் எல்லாம் திருச்சிக்குச் சென்று மாநாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு உணர்வுப்பூர்வமான ஒத்துழைப்பினை நல்கி வருகின்ற புகைப்படங்கள் எல்லாம் நம்முடைய ஏடுகளிலே வெளிவருவதைக் கண்டிருப்பாய்!

தஞ்சை மாவட்டக் கழகத்தின் தளகர்த்தர், முன்னாள் அமைச்சர் தம்பி கோ.சி. மணி நடக்க முடியாத நிலையிலேகூட மற்றவர்களின் துணையோடு வந்து மாநாட்டுப் பந்தலைப் பார்த்திருக்கிறார். அந்த அளவுக்கு அடக்க முடியாத ஆர்வம் அவருக்கு! அதுபோலவே மற்ற மாவட்டக் கழகங்களின் செயலாளர் கள் - குறிப்பாக திண்டுக்கல் மாவட்டக் கழகச் செயலா

ளர் தம்பி ஐ. பெரியசாமி, தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளர், முரட்டுப் பக்தர் தம்பி என்.பெரியசாமி, கோவை மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பொங்கலூர் பழனிசாமி, கடலூர் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மதுரை மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி மூர்த்தி, தேனி மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி எல்.மூக்கையா மற்றும் அவர்களோடு எல்.கணேசன், அறந்தாங்கி ராஜன், சேடப்பட்டி முத்தையா, அர. சக்கரபாணி, குத்தாலம் கல்யாணம், செ.ராமலிங்கம் ஆகியோர் பரவசத்தோடு சென்று பார்த்து வந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் வரவேற்று தம்பி நேருவும், திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மு.அன்பழகன், அன்பில் பெரியசாமி, காஜாமலை விஜய், ஆர்.சி. கணேசன், குடமுருட்டி சேகர், மதிவாணன், கொ. தங்கமணி, கே.என்.சேகரன், துரை.கந்தசாமி, என்.டி.ஆர். சிங்காரம், துரை, நவல்பட்டு விஜி, தியாகராஜன், ரகுபதி, கென்னடி, பாஸ்கர், மோகன் மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள் பந்தலைச் சுற்றிக் காட்டி உவகையோடு உபசரித்திருக்கிறார்கள்.

மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று தோழமைக் கட்சித் தலைவர்களுக்கெல்லாம் நானே கடிதம் எழுதி, அவற்றை பொருளாளர் தம்பி மு.க.ஸ்டாலின் நேரில் கொண்டுபோய் கொடுத்ததோடு அந்தக் கட்சிகளின் தலைவர்கள் மாநாட்டிலே தவறாமல் கலந்து கொள்வதாகப் பதில் கடிதமும் எழுதியிருக்கிறார்கள். மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களையெல்லாம் தொகுத்திடும் பணியிலே தீர்மானக் குழுத் தலைவர் தம்பி பொன். முத்துராமலிங்கம் அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும் கடிதம் எழுதி, ஆங்காங்குள்ள பிரச்சினைகள் பற்றி அறிந்து, தீர்மானக் குழு உறுப்பினர்கள் குழந்தை தமிழரசன், புதுக்கோட்டை சி.முத்துசாமி, மீ.அ.வைத்தியலிங்கம், கோவை க.ரா.சுப்பையன், வ.சத்தியமூர்த்தி, ஆதிசங்கர் ஆகியோரின் உதவியோடு என்னிடமும் கலந்தாலோசித்து, மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களையெல்லாம் முறையாகத் தயாரித்து வருகிறார்கள். மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி, பிரச்சாரக் குழு சார்பில் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம் 20-1-2014 அன்று

திருச்சி, கலைஞர் அறிவாலயத்தில், தம்பி கே.என்.நேரு தலைமையில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் எஸ்.பி.சற்குணப் பாண்டியன், கழக மகளிரணித் தலைவர் நூர்ஜகான் பேகம் முன்னிலையில் நடைபெற்று தமிழகம் முழுவதிலுமிருந்து மகளிர் அணியினர் மாநாட்டில் கலந்துகொள்வது பற்றித் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். மாநில மகளிரணிச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா, மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் காரல்மார்க்ஸ், காஞ்சனா கமலநாதன், விஜயா தாயன்பன், திருப்பூர் சுலக்சனா, திருவாரூர் விஜயகுமாரி, பவானி ராசேந் திரன், வசந்தி ஸ்டான்லி, சங்கரி நாராயணன், நளினி சாரங்கன், சித்திரமுகி சத்தியவாணி முத்து ஆகியோர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

சென்னையில் என்னைச் சந்திக்கும் மாவட்டக் கழகச் செயலாளர்கள், எங்கள் மாவட்டத்திலிருந்து இத்தனை பேருந்துகளும், வேன்களும் புறப்படுவதற்கு முன்தொகை கட்டியிருக்கிறோம். என்றைக்குப் புறப்படுகிறோம் என்ற விவரங்களையெல்லாம் என்னிடம் பெருமிதத்தோடு கூறி வருகிறார்கள். இதற்கிடையே மாநிலங்களவை உறுப்பினர் தேர்தல், நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் பணிகளும் வந்து விட்டன. அதிலும் தேவையான கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட பெரும் நிதி வேண்டும். அதற்காக தலைமைக் கழகத்தின் சார்பில் டிக்கெட் புத்தகம் முறைப்படி, கணக்குப்படி அச்சடிக்கப்பட்டு வரவேற்புக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அவரும் ஒன்றியக் கழகங்களுக்கும், நகரக் கழகங்களுக்கு அந்த டிக்கெட்டுகளைப் பகிர்ந்து விநியோகித்திருக்கிறார். தூத்துக்குடி மாவட்டக் கழகத்தின் சார்பில் 15 லட்சமும், அரியலூர், பெரம்பலூர் மாவட்டக் கழகங்களின் சார்பில் 25 லட்சமும், திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தின் சார்பில் 25 லட்சமும், கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் 10 லட்சமும், பெல் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் ஐந்து இலட்ச ரூபாயும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் திருச்சி மண்டலத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பாக

ஒரு இலட்ச ரூபாயும், மதுரை மாவட்ட தி.மு.க. சார்பாக ஐந்து இலட்ச ரூபாயும் முதல் தவணையாக நிதியளித்த புகைப்படங்கள் முரசொலியில் வெளிவந்ததையும் கண்டிருப்பாய். மற்ற அமைப்புகளின் சார்பில் நிதியினை வசூலித்து வழங்கத் தயாராக இருப்பவர்களும், மாநாட்டுத் தேதி நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்து அவற்றை வழங்கிட முன்வரவேண்டும்.

இதற்கிடையே நம்முடைய கட்சியினரும், தோழமைக் கட்சியினரும் மாநாட்டுப் பணிகளை ஆற்றினால் போதாதென்று தமிழகத்தை ஆளும் கட்சியின் சார்பிலும் நமக்காக மாநாட்டுப் பணிகளை அவர்களுடைய பாணியில் ஆற்ற முன் வந்திருக் கிறார்கள். என்ன குழப்பமாக இருக்கிறதா? நம்முடைய கட்சியினரை உசுப்பி விட்டால்தானே மேலும் மேலும் எழுச்சி பெறுவார்கள்; அதற்கு உதவிடுவது போல திருச்சி மாநகரில், இந்த மாநாட் டினையொட்டி நாம் வைத்திருந்த ப்ளக்ஸ் போர்டு களையெல்லாம் எங்கிருந்தோ வந்த அறிவுரையின்படி காவல் துறையினரே முன்வந்து, அந்தத் தட்டிகளை யெல்லாம் அகற்றியிருக்கிறார்கள். கட்சி சார்பில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்போது, அதற்கு முன் ப்ளக்ஸ் போர்டுகளை வைக்கவும், நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் அவற்றை எடுத்துவிடவும் நீதிமன்றமே அனுமதி கொடுத்திருக்கின்ற நிலையில் அ.தி.மு.க. அரசின் காவல் துறை, மாநாடு நடைபெறுவதற்கு முன்பாகவே, மாநாடு பற்றி கழகத்தின் சார்பில் வைக்கப்பட்டிருந்த போர்டுகளையெல்லாம் அகற்றி யிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் நம்முடைய கழக போர்டுகளுக்குப் பக்கத்திலேயே முதலமைச்சர், ஜெயலலிதாவின் பிறந்த நாளினையொட்டி அ.தி.மு.க. சார்பில் வைக்கப்பட்டுள்ள பிறந்த நாள் வாழ்த்துப் பேனர்களை அகற்றாமல் விட்டு வைத்திருக் கிறார்கள். அந்த இரண்டு காட்சிகளையும் புகைப்படம் எடுத்து முரசொலியிலேயே வெளியிட்டிருக்கிறார் கள். மாநாடு நெருங்க நெருங்க இன்னும் என்னென்ன வகையில் திருப்பணி செய்யவிருக்கிறார்களோ?

இதுபோன்ற எத்தனையோ தடைகளை யெல்லாம் தாண்டி வென்று வளர்ந்ததுதானே நம்முடைய கழகம்! சீப்பை ஒளித்துவிட்டால்

திருமணமே நின்று விடும் என்று நினைக்கிறார்கள்! ஆனால் கழகத்தைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட எதிர்ப்புகளையெல்லாம் புறங்கண்டு, திருச்சி மாநாடு கழக வரலாற்றில் மீண்டும் ஒரு சிறப்பான இடத்தைப் பெறும் என்பதில் எள்ளளவு சந்தேகமும் இல்லை. வெட்டி வா என்றால், கட்டி வரும் காளைகளாம் என்னுடைய அருமை உடன்பிறப்புகளே, கழகத்தின் மாநாடுகளையெல்லாம் வெற்றி மாநாடுகளாக்கி கழகத்தின் தலைமையை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திடும் தோழர்களே, இதோ கழகத்தின் பத்தாவது மாநில மாநாட்டையும் வெற்றி மாநாடுகளின் பட்டியலிலே பொன்னெழுத்துகளால் பொறித்திடப் புறப்படுவீர்! பத்தாவது மாநில மாநாடு - பாரினில் பார்த்தது உண்டோ இதுபோல் இன்னொரு மாநாடு - என்று நாட்டார் வியக்குமளவுக்கு இதனை நடத்திக் காட்டிடுவீர் என்ற நம்பிக்கையோடு நாளும் காத்திருக்கும் உங்கள் அன்பு அண்ணன்; உங்களின் உடன்பிறப்பு!

அன்புள்ள,

மு.க.

## திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே? (6)

உடன்பிறப்பே,

1975ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெற்ற கழகத்தின் ஐந்தாவது பொது மாநில மாநாடு பற்றி கடந்த வாரம் வரை குறிப்பிட்டிருந்தேன். அதற்குப் பிறகு 1977ஆம் ஆண்டு மே திங்களில் மதுரையில் கழகத்தின் சிறப்பு மாநாடும், 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் சென்னையில் திராவிடர் கழக இந்தி எதிர்ப்பு மாநாடும், அதே ஆண்டு டிசம்பரில் திருச்சியில் தி.மு.க. இந்தி எதிர்ப்பு மாநில மாநாடும், 1980ஆம் ஆண்டு நெல்லையில் மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடு, அதே ஆண்டு டிசம்பரில் பெரியார் மாவட்ட தி.மு.க. முதல் மாநாடு ஈரோட்டிலும், 1981ஆம் ஆண்டு ஜனவரி கடைசி வாரத்தில் வட ஆர்க்காடு மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடும், அதே ஆண்டு ஜூலையில் தென் ஆர்க்காடு மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடு கடலூரிலும், அதே ஆண்டு ஆகஸ்டில் தி.மு.க. மகளிர் மாநில இரண்டாவது மாநாடு திருச்சி தேவர் மன்றத்திலும், 1982ஆம் ஆண்டு மே திங்களில் தஞ்சை மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடும் நடைபெற்றன.

1983ஆம் ஆண்டு ஜூலையில் கிழக்கு முகவை மாவட்ட தி.மு.க. மாநாடும், 1984ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் புதுவை மாநில தி.மு.க. மாநாடும், 1984ஆம் ஆண்டு ஜனவரியில் திருச்சி மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடு கரூரிலும், அந்த மாத இறுதியில் மதுரை மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடும், அந்த ஆண்டு பிப்ரவரியில் சேலம் மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடும், அதே ஆண்டு செப்டம்பரில் அண்ணா மாவட்ட தி.மு.க. ஆறாவது மாநாடும், 1986ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தி.மு.க. விவசாயிகள் அணி சார்பில் மாநில மாநாடும்,

நவம்பரில் கோவை மாநகரில் இந்தி ஆதிக்க எதிர்ப்பு தி.மு.க. மாநில மாநாடும் சிறப்பாக நடைபெற்ற பிறகு, கழகத்தின் ஆறாவது பொது மாநில மாநாடு இதே திருச்சி அண்ணா நகரில், இன்றைய கடலூர் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி எம்.ஆர்.கே. பன்னீர் செல்வத்தின் அருமைத் தந்தையும், சுயமரியாதைச் சுடருமான எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி பந்தலில், தமிழக அரசின் தலைமைக் கொறடாவாக சிறப்பாகப் பணியாற்றிய, நான் அன்புடன் ஜமீன்தார் என்று அழைக்கின்ற து.ப. அழகமுத்து பெயரால் அமைந்த அரங்கில் 1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9, 10, 11 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இந்த மாநாட்டோடு இணைந்து, இளைஞர் அணி சமதர்ம சமுதாய சீர்திருத்த மறுமலர்ச்சி மாநாடாக இரண்டாவது நாள் காலை முதல் இரவு வரை நடைபெற்றது. முதல் நாள் மாபெரும் அணிவகுப்புப் பேரணி நடந்தது. திருச்சியில் நடைபெற்ற இந்த 6 ஆவது பொது மாநில மாநாட்டிற்கு முன்புதான் இந்தத் திருப்பு முனை என்ற பெயரே எழுந்தது. திருப்புமுனை, திருப்புமுனை என்று சொல்கிறீர்களே, அது என்ன திருப்புமுனை என்று பத்திரிகைக்காரர்கள்கூட என்னைக் கேட்டார்கள்.

அதே திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டிற்கு அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்பில் அழைக்கிறார் என்ற தலைப்பிலே பாசத்தையும் பைந்தமிழையும் குழைத்துத் தொடர்ந்து எழுதி, கழகத் தோழர்களையெல்லாம் எழுச்சி கொள்ளச் செய்து அந்த மாநாட்டிற்கு வரவழைத்தார்கள். அதுபோல திருச்சி என்றாலே, திருப்புமுனை மாநாடுதானே என்ற தலைப்பில் மாநில மாநாடு ஒரு திருப்புமுனை என்று அறுதியிட்டுக் கூறிட என்ன காரணம் என்று கேட்பவர்களுக்கு நான் கூறுகின்ற பதில், நான் ஆறாவது மாநில மாநாட்டிலேயே தெரிவித்ததுதான். திருச்சியிலிருந்து சேலத்திற்குச் செல்ல வேண்டுமென்று நாம் புறப்படுகிறோம். சேலத்திற்குச் செல்ல வேண்டுமென்று புறப்பட்டால், நாம் வழியிலே இடப் பக்கம் முசிறி வழியாகத் திரும்பி, நாமக்கல் வழியாகச் சேலத்திற்குச் சென்றிடலாம். முசிறிப் பகுதியில் திரும்ப வேண்டிய பாதையை தவற விட்டு விட்டு, உளுந்தூர் பேட்டை வரை சென்ற பிறகு, அடடா,

உளுந்தூர்பேட்டை வரை வந்து விட்டோமே, சேலத்திற்கு அல்லவா செல்ல வேண்டும், பரவாயில்லை, இங்கிருந்து சேலத்திற்குச் செல்ல சாலை இருக்கிறதே, அந்த வழியாகச் செல்லலாம், என்று உளுந்தூர் பேட்டையிலிருந்து சேலத்திற்குச் செல்லலாம். அதைப்போல திருச்சியில் அரசியல் ரீதியாக நாம் நடைபோடுவோம் என்று ஆரம்பித்த இயக்கம், முசிறியில் திரும்பாமல், நம்முடைய சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பற்றிய கவலையை விட்டு விட்டு, நேராக உளுந்தூர்பேட்டை வரை சென்று விட்ட காரணத்தால், மறுபடியும் சேலத்திற்கு அல்லவா செல்ல வேண்டும், சமுதாயச் சீர் திருத்தக் கொள்கைகளை விட்டு விடக்கூடாது என்று செயல்படுவதுதான் திருப்புமுனை! இதைத்தான் அந்த ஆறாவது பொது மாநில மாநாட்டிலும் விளக்கினேன். இப்போதும் திரும்பக் கூறுகிறேன்.

தி.மு. கழகத்தினுடைய அரசியல் பயணத்தில் சமுதாயச் சீர்திருத்தம், சமுதாய மறுமலர்ச்சி இவை கைவிடப்பட்ட ஒன்றல்ல. நீதிக் கட்சிக் காலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு, லண்டன் மாநகரில் மன்னருடைய அரண்மனை. அதிலே ஒரு விருந்து. செல்வந்தர்களும், சீமான்களும் கூடியிருக்கிறார்கள். அனைவரும் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் எப்போது நுழைவார் என்று அவர் வருகின்ற வழியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மன்னர் வருகிறார் - அனைவரும் கைதட்டி வரவேற்கிறார்கள். மன்னர் ஒவ்வொருவரிடமும் வந்து கை குலுக்குகிறார். சர் ஏ.டி. பன்னீர்செல்வம், சர் ஏ. ராமசாமி முதலியார், ஜெயகர், முகமது உஸ்மான் போன்றவர்களிடம் கை குலுக்கியவாறு வந்தவர், முறுக்கு மீசையும், அகன்ற நெற்றியும், தெளிவான மார்பையும் கொண்ட ஒருவர், மன்னர் கை குலுக்க வந்தபோது, கையை நீட்டாமல் இழுத்துக் கொண்டார். மன்னர் அதிர்ச்சியோடு, அவரைப் பார்த்த போது, மாட்சிமை பொருந்திய மன்னர் அவர்களே! நீங்கள் என்னைத் தீண்டக் கூடாது, தீண்டினால் மன்னருக்கு தீங்கு நேரும். ஏனென்றால் நான் இந்தியாவில் உள்ள தீண்டத்தகாத வகுப்புகளில் ஒன்றான பறையர் இனத்தைச் சேர்ந்தவன் என்று கணீரென்று ஆங்கிலத்தில் சொன்னார். உடனே மன்னர் ஆச்சரியமடைந்து, மனிதனை மனிதன்

தீண்டுவது கூடாது என்பது என்ன நியாயம்? என்று கேட்டு அந்த மனிதரை உற்றுப் பார்த்தபோது, அந்த மனிதருடைய கோட்டில் இணைக்கப்பட்டிருந்த அட்டை ஒன்றில், ராவ் பகதூர் ஆர். சீனிவாசன் - பறையன் - நான் ஒரு தீண்டத்தகாதவன் என்று எழுதப்பட்டிருந்தது. அப்போது மன்னர், பரவாயில்லை, மிஸ்டர் ராவ் பகதூர் சீனிவாசன் அவர்களே என்று கூறியவாறு, அவருடைய கையை அழுத்திப் பிடித்துக் குலுக்கினார். இது நடந்த சம்பவம். யார் அந்த சீனிவாசன்? செங்கற்பட்டு மாவட்டத்தில் இரட்டை மலை என்ற ஒருவருடைய பிள்ளையாகப் பிறந்து - தந்தையின் பெயரை தன் பெயரோடு இணைத்துக் கொண்டு இரட்டை மலை சீனிவாசன் என்று சூட்டிக் கொண்ட - நீதிக் கட்சியின் தலைவர்களிலே ஒருவர்தான் அந்த மாபெரும் மனிதர்! அந்த அளவிற்கு அந்தக் காலத்தில் தீண்டாமை தமிழகத்தில் கொடிகட்டி ஆட்சி புரிந்தது.

அந்த இரட்டை மலை சீனிவாசன்தான் 1924ஆம் ஆண்டு சென்னை சட்டமன்றத்திலே தீண்டாமை எதிர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். அரசு அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. அந்தத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட அந்த 1924ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3ஆம் தேதியன்றுதான் நான் பிறந்தேன். இப்போது 90 வயதைக் கடந்து விட்டேன்.

இந்த மாநாட்டுக்கான மாபெரும் ஏற்பாடுகளை முன்கூட்டியே என்னை அழைத்து வந்து காட்டிட வேண்டுமென்று வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி நேருவுக்கு கட்டுக்கடங்காத ஆசை. நான் அவர் வயதிலே இருந்தால், இந்த மாநாட்டு ஏற்பாடுகளைக் காண அவர் அழைக்காமலேயே வந்திருப்பேனே? 1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டிற்கு பேறிஞர் அண்ணா அவர்கள் ஒரு வார காலத்திற்கு முன்பே வந்து தங்கிக் கொண்டு, திருச்சி நகரத் தோழர்களையெல்லாம் திரட்டி அன்பெனும் நூலால் இணைத்து வேலை வாங்கிய காட்சியை இன்னமும் மறக்காதவன்தான் நான். அதனால்தான் நான் வராவிட்டாலும், நான் வருவதைப் போன்ற ஊக்கத்தை நீங்கள் பெற வேண்டுமென்பதற்காக கழகத்தின் பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலினை இரண்டு முறை அனுப்பி வைத்து, ஏற்பாடுகள்

எப்படியெல்லாம் நடக்கின்றன என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

திருச்சியில் நடைபெறும் இந்தப் பத்தாவது மாநில மாநாட்டிற்கு பல்வேறு மாவட்டக் கழகங்கள் தாங்களாகவே முன்வந்து அளித்துள்ள நிதியினைப் பற்றியெல்லாம் கடந்த வாரம் தெரிவித்திருந்தேன். நான் கடந்த வாரம் எழுதியதைத் தொடர்ந்து மேலும் பல்வேறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் திருச்சி சென்று மாநாட்டு ஏற்பாடுகளையெல்லாம் கண்டு களிப்புற்றதோடு, நிதி உதவிகளையும் செய்திருக்கிறார்கள்.

திருச்சி மாநில மாநாட்டிற்காக, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை சார்பில் 15 இலட்சம் ரூபாயைப் பேரவைத் தலைவர் பேரூர் ஆ. நடராசன், பொதுச் செயலாளர் மு. சண்முகம், பொருளாளர் கி. நடராசன் மற்றும் அதன் நிர்வாகிகள் சென்னையில் என்னைச் சந்தித்து வழங்கினர். கரூர் கே.சி. பழனிசாமி, எம்.எல்.ஏ., 25 இலட்சம் ரூபாயும், புதுக்கோட்டை ரகுபதி 25 இலட்சம் ரூபாயும், கரூர் சின்னசாமி 25 இலட்சம் ரூபாயும், விழுப்புரம் மாவட்டக் கழகத்தின் சார்பில் பொன்முடி 15 இலட்சம் ரூபாயும், காஞ்சிபுரம் மாவட்டக் கழகத்தின் சார்பில் தா.மோ. அன்பரசன் 15 இலட்சம் ரூபாயும், சேலம் மாவட்டக் கழகத்தின் சார்பில் சிவலிங்கம் 5 இலட்சம் ரூபாயும், திருப்பூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் சாமிநாதன் 10 இலட்சம் ரூபாயும், கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் பொங்கலூர் பழனிசாமி 15 இலட்சம் ரூபாயும், சிவகங்கை மாவட்டக் கழகத்தின் சார்பில் பெரியகருப்பன் 15 இலட்சம் ரூபாயும், புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தின் சார்பில் பெரியண்ணன் அரசு 10 இலட்சம் ரூபாயும், கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் நன்னியூர் ராஜேந்திரன் 20 இலட்சம் ரூபாயும், தென்சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பில் ஜெ. அன்பழகன் 10 இலட்சம் ரூபாயும், தஞ்சை மாவட்டக் கழகத்தின் சார்பில் பழனிமாணிக்கம் 15 இலட்சம் ரூபாயும், லால்குடி புள்ளம்பாடி கழகம் சார்பாக சவுந்திர பாண்டியன் எம்.எல்.ஏ., 20 இலட்சம் ரூபாயும், கழக விவசாய அணி சார்பில் அந்த அணியின் செயலாளர் கே.பி. ராமலிங்கம், ஐந்து இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயும், பகுதிக் கழகச் செயலாளர் மதிவாணன் 5 இலட்சம் ரூபாயும், ஒன்றியச் செயலாளர் கதிர்வேலு 5

இலட்சம் ரூபாயும் மேலும் பலரும் நிதியாக அளித்திருக்கிறார்கள்.

நமது கழகத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு மாநாட்டிலும், அந்த மாநாடு காரணமாக வந்த வரவு எவ்வளவு, செலவழிக்கப்பட்டது எவ்வளவு என்ற கணக்கைக் கூறி மீதப்பட்ட தொகையை வெளிப்படையாக அறிவிப்பது வழக்கம். 1951ஆம் ஆண்டு முதல் மாநில மாநாடு சென்னையில் நடைபெற்ற போது மிச்சப்பட்ட தொகை 30 ஆயிரம் ரூபாய். இரண்டாவது மாநில மாநாடு 1956ஆம் ஆண்டு நடைபெற்றபோது - மிச்சப்பட்ட தொகை 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய். மூன்றாவது மாநில மாநாடு 1961ஆம் ஆண்டு மதுரையில் நண்பர் முத்து நடத்தியபோது மிச்சப்பட்ட தொகை ஒரு இலட்சம் ரூபாய். நான்காவது மாநில மாநாடு 1967இல் சென்னையில் நடைபெற்றபோது, நான் பொருளாளராக இருந்து ஒன்றரை ஆண்டுகள் அலைந்து திரிந்து திரட்டிய தொகையையும் சேர்த்து மீதப்பட்ட தொகை 11 இலட்சம் ரூபாய். ஐந்தாவது மாநாடு, கோவையில் நண்பர் புஞ்சைப் புளியம்பட்டி பி.ஏ.சாமிநாதன் முன்னின்று நடத்திய மாநாட்டில் மிச்சப்பட்டது 10 இலட்சத்து பத்தாயிரம் ரூபாய். 1990ஆம் ஆண்டு தி.மு.க. ஆறாவது மாநில மாநாடு திருச்சியில் தம்பி செல்வராஜ் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடைபெற்ற போது மிச்சம் 23 இலட்சத்து 15 ஆயிரத்து, 413 ரூபாய். 1993ஆம் ஆண்டு கோவையில் தி.மு.க. 7 ஆவது பொது மாநில மாநாடு நடைபெற்ற போது மிச்சம் 31 இலட்ச ரூபாய். 1996ஆம் ஆண்டு இதே திருச்சியில் தி.மு.க. 8 ஆவது பொது மாநில மாநாடு தம்பி கே.என். நேரு வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடைபெற்ற போது மாநாட்டு நிதி வசூல் மொத்தத் தொகை 1 கோடியே 32 ஆயிரத்து 530 ரூபாய். 2014ஆம் ஆண்டு பிப்ரவரியில், அதே நேரு மூன்றாவது முறையாக, அதாவது ஹேட்ரிக் என்பார்களே, அதுபோலவே வரவேற்புக் குழுத் தலைவராக தம்பி கே.என். நேரு இருந்து நடத்துகின்ற இந்தப் பத்தாவது பொது மாநில மாநாட்டில் மிச்சத் தொகை எவ்வளவு தரப்போகிறார் என்பதை எல்லோரையும் போலவே அறிந்து கொள்ள நானும் காத்திருக்கிறேன்.

தி.மு.க. 7 ஆவது பொது மாநில மாநாடு மற்றும் இந்தி எதிர்ப்பு மாநாடு கோவை மாநகரில், 1993ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26, 27, 28 ஆகிய மூன்று நாட்களில் நம்முடைய மு. கண்ணப்பன் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்த நடத்திய மாநாடாகும். பேரறிஞர் அண்ணா நகரில், தாளமுத்து நடராசன் பந்தலில், வால்பாறை இராமசாமி முகப்பில், கோவை அரங்கநாதன் அரங்கத்தில் நடைபெற்றது.

கோவையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தொழில் பிரதேசங்கள் என்றால், பத்தாவது மாநில மாநாடு நடைபெறும் திருச்சி, அதைச் சுற்றியுள்ள மாவட்டங்கள் காவிரி தீரத்தின் டெல்டா மாவட்டங் களாகும். விவசாயிகள் நிறைந்த மாவட்டம். வேளாண் பெருங்குடி மக்கள் அணி அணியாக வந்து கூடப்போகின்ற மாநாடு. “ஏரினும் நன்றால் எருஇடுதல்; கட்டபின் நீரினும் நன்றுஅதன் காப்பு” என்று வள்ளுவர் சொன்னார். ஏர் பிடித்து உழுவதை விட எருவிடுதல் நல்லது. எரு விட்டு தண்ணீர் பாய்ச்சி பயிருக்குக் களை எடுப்பதையும் விட, அந்த நிலத்தில் ஆடுமாடுகள் மேயாமல் காப்பது எல்லா வற்றையும் விட மேலானது என்று வள்ளுவர் சொன்னார். அதைப்போலத்தான் ஆயிரங்காலத்துப் பயிராம் நமது கழகத்தை - அண்ணா என்கிற அகிலம் போற்றிடும் உழவர் உழுது களை நீக்கிக் கவனமாகச் சாகுபடி செய்திட்ட இந்தப் பயிரைக் காப்பாற்றி வளர்க்கின்ற அரும் பணியிலே நாமனைவரும் ஈடுபட்டுள்ளோம்.

கழகம் - தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரற்ற வழிகாட்டி! பாதுகாப்புப் பேரரண்! விடிவிளக்கு! குன்றின் மேலிட்ட குல விளக்கு! அண்ணா அவர்கள் 1969ஆம் ஆண்டு மிகுந்த நம்பிக்கையோடு என் கையில் கொடுத்து விட்டுச் சென்ற விளக்கு! அந்த விளக்கு அவ்வப்போது அடிக்கின்ற காற்றால் அணைந்து விடுமோ என்று சிலர் ஆரூடம் போட்டுப் பார்க்கிறார்கள்! அணைந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் நானும் ஒவ்வொரு கணமும் எச்சரிக்கையோடு இருக்கிறேன். இந்த விளக்கென்ன சாதாரணமான விளக்கா? தந்தை பெரியார் வார்த்த எண்ணெயில் - பேரறிஞர் அண்ணா போட்டுக் கொடுத்த திரியில் தமிழ்நாட்டு மக்கள் நீங்கள் அனைவரும் இணைந்து ஏற்றி வைத்த

கோபுர தீபம் அல்லவா? இந்தக் கழகத்தைக் கட்டிக் காப்பாற்ற - அதை மேலும் வலுவூட்ட - கழகப் பணிகளைத் தொய்வின்றி ஆற்றிட - நெஞ்சுயர்த்தி நம்முடைய பயணத்தை முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து மேற்கொள்ள சபதம் ஏற்கத்தான் வரும் 15ஆம் தேதியன்று திருச்சியிலே கூடவிருக்கிறோம்.

மாநாட்டு ஏற்பாடுகளைச் செய்தியாளர்களிடம் கூறிய வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி நேரு, செங்கோட்டை வடிவில் நுழைவாயிலும், நாடாளுமன்ற வடிவில் முகப்பும் அமைக்கப்பட்டிருப்பதாகவும், தொண்டர்களின் வசதிக்காக 550 கழிவறைகள், 10 இடங்களில் குளியல் தொட்டிகள், 40 இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்க் குழாய்கள், 10 ஆயிரம் வாகனங்கள் நிறுத்தும் அளவுக்கு பார்க்கிங் வசதி, ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவக் குழு உள்ளிட்டவற்றை ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிவித் திருக்கிறார். மாநாட்டில் என்னென்ன தலைப்புகளில் யார் யார் பேசவிருக்கிறார்கள் என்ற பட்டியல் எல்லாம் தலைமைக் கழகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. ஓரிரு நாட்களில் ஏடுகளின் வாயிலாக அறிவிக்கப்படும். உலகத்தில் எந்தவொரு இயக்கத்தின் சார்பிலும், கட்சியின் சார்பிலும் நம்முடைய இயக்கத்தைப் போல இந்த அளவிற்கு மாநாடுகளைத் திட்டமிட்டு நடத்தியிருக்க மாட்டார்கள். கழகம் நடத்திய மாநாடுகளையெல்லாம் வெற்றி மாநாடுகளாக ஆக்கிக் காட்டிய பெருமை என் அருமை உடன்பிறப்புகளே, இந்தப் பத்தாவது மாநில மாநாட்டினையும் வெற்றி மாநாடாக்கிட விரைந்து வந்திடுவாய் திருச்சி நகர் நோக்கி! நீ வரும் வழி நோக்கி விழி வைத்துக் காத்திருப்பேன்.

அன்புள்ள,

மு.க.

## திருச்சி என்றாலே, திருப்பு முனை மாநாடு தானே? ( 7)

**உடன்பிறப்பே,**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆறாவது பொது மாநில மாநாடு வரை கடந்த ஆறு உடன்பிறப்பு மடல்களில் விளக்கியிருந்தேன். கழகத்தின் ஏழாவது பொது மாநில மாநாடும், இந்தி எதிர்ப்பு மாநாடும் இணைந்து 1993ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26, 27, 28 ஆகிய நாட்களில் கோவையில் பேரறிஞர் அண்ணா நகரில், தாளமுத்துநடராசன் பந்தலில், வால்பாறை ராமசாமி முகப்பில், கோவை அரங்கநாதன் அரங்கத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு நான் தலைமை தாங்கி, கொடியேற்றி வைத்தேன். பொதுச் செயலாளர் பேராசிரியர் மாநாட்டின் திறப்பாளர். வரவேற்புக் குழுத் தலைவர் அப்போது கோவை மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த அருமை நண்பர் மு. கண்ணப்பன்.

மாநாட்டில் இசை முரசு நாகூர் அனீபா, மயிலை தேவன், முரசொலி முகிலன், விஜயா தாயன்பன், வளவனூர் மணிமாறன், நெல்லை அபூபக்கர், ஆரூர் செந்தமிழன், இராஜபாளையம் இசைமணி, ஆயிரம் விளக்கு எஸ்.ஏ.எம். உசேன் அப்துல் காதர் ஆகியோர் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும் முதல் நாள் இரவு போலீஸ் கண்ணன் குழுவினரின் மேற்கே தோன்றும் உதயம் நாடகமும், இரண்டாம் நாள் என்.எஸ்.கே. தாமு குழுவினரின் ஓடி விளையாடு பாப்பா நாடகமும் நடைபெற்றன.

அடுத்து, இதே திருச்சியில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் எட்டாவது பொது மாநில மாநாடு, 1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26, 27, 28 ஆகிய நாட்களில் அன்பில்

தர்மலிங்கம் பந்தலில், மன்னை நாராயணசாமி முகப்பில், சாதிக்பாட்சா அரங்கில், தென்னரசு தியாகிகள் மணி மண்டபத்தில், வீரையா நினைவு கொடி மேடையில் இன்றைய வரவேற்புக் குழுத் தலைவர் கே.என். நேருவின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து சேலத்தில் சிறப்பு மாநில மாநாடு, 1997ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27, 28, 29 ஆகிய நாட்களிலும், தி.மு. கழகப் பொன் விழா தொடக்கச் சிறப்பு மாநாடு திருநெல்வேலியில் 1998ஆம் ஆண்டு செப்டம்பர் 17, 18 ஆகிய நாட்களிலும், விழுப்புரம் மாவட்ட தி.மு.க. மாநாடு 2003ஆம் ஆண்டு செப்டம்பர் 19, 20, 21 ஆகிய நாட்களிலும், தென் மண்டல தி.மு.க. மாநாடு, விருதுநகரில் 2004ஆம் ஆண்டு பெப்ரவரி 21, 22 ஆகிய நாட்களிலும், என்னுடைய முத்து விழா, நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி விழா ஆகியவற்றை இணைத்து தி.மு.க. சிறப்பு மாநாடு ஒன்று சேலத்தில் 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21, 22 ஆகிய நாட்களிலும், திண்டுக்கல் மண்டல தி.மு.க. மாநாடு, 2005ஆம் ஆண்டு மார்ச் 12, 13 ஆகிய நாட்களிலும், தஞ்சை மண்டல தி.மு.க. மாநாடு, 2005ஆம் ஆண்டு ஏப்ரல் 16, 27 ஆகிய நாட்களிலும், கோவை மண்டல தி.மு.க. மாநாடு 2005ஆம் ஆண்டு மே 28. 29 ஆகிய நாட்களிலும், வேலூர் மண்டல தி.மு.க. மாநாடு 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27, 28 ஆகிய நாட்களிலும் நடைபெற்றதைத் தொடர்ந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்பதாவது பொது மாநில மாநாடு இதே திருச்சியில் 2006ஆம் ஆண்டு மார்ச் 3, 4, 5 ஆகிய நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் வழிகாட்டும் தலைவராகவும் விளங்கி வரும் திருமதி சோனியா காந்தி அம்மையார் கலந்து கொண்டார்கள்.

இவற்றைத் தொடர்ந்து தி.மு.க. இளைஞர் அணி முதல் மாநில மாநாடு, திருநெல்வேலியில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களிலும், தி.மு. கழக மகளிர் அணி மாநில மாநாடு 2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14, 15 ஆகிய நாட்களிலும் நடைபெற்றதைத் தொடர்ந்து தான் வரும் 15, 16 ஆகிய நாட்களில், திருச்சியில் நமது மாநில மாநாடு வீரபாண்டி எஸ்.

ஆறுமுகம் பெயரால் அமைந்துள்ள பந்தலில், வாசுகி முருகேசன் மேடையில், பொற்செல்வி இளமுருகு அரங்கத்தில் நடைபெறவுள்ளது. முன் முகப்பு எம்.எஸ். வெங்கடாசலம் பெயரையும், உள் முகப்பு மா. பாலகிருஷ்ணன் பெயரையும், நுழைவு வாயில் பூண்டி கே. கலைச் செல்வன் பெயரையும், கொடி மேடை கே.என். ராமஜெயத்தின் பெயரையும் தாங்கி அமைந்துள்ளது.

என்னுடைய இந்தக் கடிதத்திற்கும், மாநாட்டிற்கும் இடையே இன்னும் ஐந்து நாட்கள் தான் உள்ளன. நீங்கள் எல்லாம் , உங்கள் குடும்பத்தினரோடு வருவதற்கு தயாராகிக் கொண்டிருப்பீர்கள். திருமதி சோனியா காந்தி அம்மையாரும் கலந்து கொண்ட தி.மு. கழகத்தின் ஒன்பதாவது மாநில மாநாடு, இதே திருச்சியில் நடைபெற்றதற்குப் பிறகு எட்டு ஆண்டுகள் கழித்து இந்த பத்தாவது மாநில மாநாடு நடைபெறுகிறது. இந்த பத்தாவது மாநில மாநாட்டிற்கு உன்னை வா, வா என்று அன்போடும் உரிமையோடும் அழைத்து ஏழு கடிதங்கள் எழுதியிருக்கிறேன். ஆனால் எட்டாவது மாநில மாநாட்டிற்கு பதினோறு கடிதங்கள் எழுதினேன் என்பது எனக்கு நினைவிலே உள்ளது. அந்த எட்டாவது மாநில மாநாட்டிலே நான் உரையாற்றும் போது, வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி நேரு இந்த மாநாட்டின் வெற்றிக்கு முழுப் பொறுப்பு என்று சொன்னால் அதை யாரும் மறுக்க இயலாது அவர் பட்டிருக்கின்ற இன்னல்கள் - ஆவர் ஆற்றியிருக்கின்ற பணி - ஒவ்வொரு நாளும் திருச்சியிலிருந்து சென்னைக்குத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொள்வது மட்டுமல்ல; காலையில் ஒரு செய்தி கேள்விப்பட்டால் மாலையில் சென்னைக்கு நேரில் காரில் வந்து என்னை, பொதுச் செயலாளரை, பொருளாளரைக் கலந்து கொண்டுவிட்டு, பணியாற்ற உடனடியாக திருச்சிக்கு விரைந்து வருகின்ற ஒரு நிலை இதனையெல்லாம் என்னால் மறக்க முடியாது என்று குறிப் பிட்டதைத் தான், இந்த மாநாட்டின் ஏற்பாடுகளிலும் மீண்டும் அவர் மெய்ப்பித்திருக்கிறார்.

மாநாடு என்றாலே எனக்கு மகிழ்ச்சி தான்; ஆனால் இது மாநில மாநாடு; அதுவும் திருச்சியிலே என்றால் என் மன மகிழ்ச்சிக்கு

எல்லை தான் ஏது? திருச்சி என்றாலே எனக்கு எத்தனையோ நினைவுகள்; உருக்கமும் உணர்ச்சியும் கொப்ராகபளிக்கின்ற அந்த நினைவுகள் கடந்த சில நாட்களாக என் நெஞ்சில் சுற்றிச் சுழன்று சுடர் வீசிக் கொண்டிருக்கின்றன. இந்தத் திருச்சி மாநகரத்தில் எனக்கு நண்பராக, சகோதரராக, என் உயிர்த் தோழராக, என்னுடைய மெய்க் காப்பாளர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம் கொள்பவராக வாழ்ந்தவர் தான் என் ஆருயிர் நண்பர் அன்பில் தர்மலிங்கம். திருச்சி, தஞ்சை மாவட்டங் களில் என்னுடைய நிகழ்ச்சி என்றால், மேடைகளில் ஒரு பக்கத்தில் அன்பில் இருப்பார்; இன்னொரு பக்கத்தில் எனக்குத் தாயைப் போல விளங்கிய மன்னை நாராயணசாமி வீற்றிருப்பார். அவர்களைப் பற்றிய நினைவுகள் கடந்த சில வாரங்களாக என்னுள்ளே அலைஅலையாக எழுந்து என்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன.

2006ஆம் ஆண்டு மார்ச் 3, 4, 5 ஆகிய நாட்களில் இதே திருச்சியில் நடை பெற்ற ஒன்பதாவது மாநில மாநாட்டின் ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக 21-2-2006 அன்று நானும், அப்போது கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக இருந்த தம்பி ஸ்டாலினும், தலைமைக்கழக முதன்மைச் செயலாளர் துரைமுருகனும் வந்திருந்தோம். தி.மு. கழகமும், தோழமைக் கட்சிகளும் எத்தனை தொகுதி களில் போட்டியிடும் என்பதை அறிவிக்க இருந்த மாநாடு அது. அந்த மாநாட்டில் 82 அடி உயரக் கொடிக் கம்பத்தில் கொடியேற்றி வைத்தேன். அப்போது எனக்கு வயது 82. இந்தப் பத்தாவது மாநில மாநாட்டில் 90 அடி உயரக் கொடிக் கம்பத்தில் மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக பெப்ரவரி 15ஆம் தேதி காலையில் நான் கொடியேற்றி வைக்கவிருக்கிறேன்.

2006ஆம் ஆண்டில் இதே திருச்சியில் நடைபெற்ற ஒன்பதாவது மாநில மாநாடு - அண்ணா நகர் - அன்பில் பொய்யாமொழி பெயரில் பந்தல் - முரசொலி மாறன் பெயரில் மேடை - து.ப. அழகமுத்து பெயரில் அரங்கம் - எஸ்.ஜே. சாதிக்பாட்சா பெயரில் முன் முகப்பு - க.சொ. கணேசன் பெயரில் உள்முகப்பு - ஜே.எஸ். இராசு பெயரில் நுழைவு வாயில் - சிங்கத் தமிழன் சின்னச்சாமி பெயரில் கொடிமேடை - நாஞ்சிலார் பெயரில் தீரர்கள் கோட்டம்; திருச்சி

சுயமரியாதைச் சுடர் மாடம் என்றெல்லாம் பெயர் சூட்டப்பட்டு நடைபெற்றது.

இப்போது 2014ஆம் ஆண்டில் நடைபெறும் இந்த பத்தாவது மாநில மாநாடு மாநாடு - வீரபாண்டி எஸ். ஆறுமுகம் பெயரில் பந்தல் - வாசுகி முருகேசன் பெயரில் மேடை - பொற்செல்வி இளமுருகு பெயரில் அரங்கல் - எம்.எஸ். வெங்கடாசலம் பெயரால் முன்முகப்பு - தா. கிருட்டிணன் பெயரில் வெளி முன் முகப்பு - மா. பாலகிருஷ்ணன் பெயரில் உள் முகப்பு - பூண்டி கே. கலைச்செல்வன் பெயரில் நுழைவு வாயில் - கே.என். ராமஜெயம் பெயரில் கொடிடை என்று பெயர் சூட்டப்பட்டு நடைபெறவுள்ளது.

முதல் நாள் மாநாட்டில் வரவேற்புக் குழுத் தலைவர் என்ற முறையில் தம்பி கே.என்.நேருவின் வரவேற்புரை - தொடர்ந்து மாநாட்டுத் தலைவரை முன் மொழிதல், வழி மொழிதல் - பின்னர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, சர். பிட்டி தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசனார், புரட்சிக் கவிஞர், மூவலூர் மூதாட்டியார், திருமதி சத்தியவாணிமுத்து, மொழிப்போர் தியாகிகள் திருவுருவப் படங்களை முறையே திருச்சி செல்வேந்திரன், திருச்சி என். சிவா, எம்.பி., முனைவர் சபாபதி மோகன், கோவை மு. இராமநாதன், ஆலந்தூர் ஆர்.எஸ். பாரதி, கவிச்சுடர் கவிதைப்பித்தன், சுப்புலட்சுமி ஜெகதீசன், எம்.ஏ. நூர்ஜகான் பேகம், முனைவர் க. பொன்முடி ஆகியோர் திறந்து வைக்கவிருக்கிறார்கள். மாலையில் பல்வேறு தலைப்புகளின் கீழ் கழகத்தின் முன்னணியினர் உரையாற்றுகிறார்கள். முதல் நாள் நிகழ்ச்சியின் முற்றாக கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் உரையாற்றவுள்ளார்.

இரண்டாம் நாள் காலையில் பல்வேறு தலைப்புகளின் கீழ் உரையாற்றுதல் தொடரும். காலை 11 மணியளவில் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். அடுத்து கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்கள் துரைமுருகன், வி.பி. துரைசாமி, சற்குணபாண்டியன், முதன்மைச் செயலாளர் ஆர்க்காடு வீராசாமி ஆகியோரின் உரைகளுக்குப் பிறகு கழகப் பொருளாளர் தளபதி தம்பி மு.க. ஸ்டாலின் உரையாற்றுவார்.

மாலையில் கழகத்தின் தோழமைக் கட்சித் தலைவர்களான தமிழர் தலைவர் கி. வீரமணி, தொல். திருமாவளவன், எம்.பி., டாக்டர் கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., பேராசிரியர் கே.எம். காதர்மொகிதீன், பேராசிரியர் எம்.எச். ஜவாகிருல்லாஹ், எம்.எல்.ஏ., அருளாளர் ஆர்.எம். வீரப்பன், பேராசிரியர் சுப. வீர பாண்டியன், கு. செல்லமுத்து, ஸ்ரீதர் வாண்டையார், பொன். குமார், பேராயர் எஸ்றா சற்குணம், எல். சந்தானம், என். ஆர். தனபாலன், திருப்பூர் அல்தாப், பி.என். அம்மாசி, லியாகத் அலிகான் ஆகியோரின் உரைகளுக்குப் பின் 7 மணி அளவில் மாநாட்டுத் தலைவர் உரையினை நான் ஆற்றவிருக்கிறேன்.

தலைப்பு கொடுக்கப்பட்டுள்ள சிறப்புப் பேச்சாளர்கள் 37 பேர் - தோழமைக் கட்சித் தலைவர்கள் 16 பேர் - படத் திறப்பாளர்கள் 9 பேர் மற்றும் கழகத்தின் முன்னணியினர் என்று சுமார் 70 பேர் இரண்டு நாள் மாநாட்டில் உரையாற்ற வேண்டும். எனவே பேச்சாளர்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திடும் முறையில் உரையாற்றுவது தான் நல்லது. ஆனால் இப்போதே பலர் தலைப்புகளுக்கு ஏற்றார் போல் பேசுவதற்கு கருத்துகளைத் தேடித் தொகுக்கத் தொடங்கிவிட்டார்கள். எனவே மாநாட்டில் பேசவிருப்போர், நேரத்தை வகுத்துக் கொண்டு உரையாற்றிடத் தயாராக வர வேண்டுமென்று உரிமையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இடையில் இன்னமும் ஐந்தே நாட்கள் தான் - 120 மணி நேரம் தான் - அடடா; அகக் கண்களால் காண்கிறேன்; அணி தேர்ப் புரவி ஆட்பெரும் படை யுடன் அன்றந்தத் தமிழ் நிலத்தில் அரசோச்சிய புலிக்கொடிச் சோழனும் - மீன் கொடிப் பாண்டியனும் - விற்கொடிச் சேரனும் போல நமது மாவட்டக் கழகங்களின் தளகர்த்தர்கள் கம்பீரமாக முதல் வரிசையில் அணிவகுத்து அமர்ந்திருக்க; அவர்கள் பின்னே அந்தந்த மாவட்டத்துச் செயல்வீரர்கள் உடனிருந்திடும் காட்சியும் - இளைஞர் அணி, தொழிலாளர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, விவசாயிகள் அணி, தொண்டர் அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக் குழு, மகளிர் தொண்டர் அணி என எழுச்சிக் கோலம் காட்டி அந்தந்த அணிகளின் செயலாளர்களுடன் கடல்

மடை திறந்தாற்போலவும் - களத்தில் புகுந்து வீரம் விளைத்திட வீறு கொண்டெழுவது போலவும் சிப்பாய் நடை போட்டு வந்து மாநாட்டில் கலந்து கொள்கின்ற காட்சியும் - அந்தச் சிங்கக் குருளைகளை சீறி வரும் புலியதனை முறத்தால் துரத்திய வீராங்கனையர் வழி வந்த தமிழச்சிகளையும், காய்த்துப் போன கரங்களுக்குச் சொந்தக்காரர்களான பாட்டாளி வர்க்கத்தினரையும், வரலாறு படித்துத் தமிழகத்தில் புதிய வரலாறு படைத்திட தலை நிமிர்ந்து வந்து கலந்து கொள்ளும் மாணவச் செல்வங்களையும், இலக்கிய ஏந்தல்களையும், உழுது பயன் விளைக்கும் நாங்கள் கழகத்தின் விழுதுகளாய்ப் பரவுவோம் என்றுரைத்திடும் விவசாயப் பெருங்குடி மக்களையும், மானம் காப்போம்; தமிழரின் இனமானமும் காப்போம் என ஒலித்திடும் நெசவாளத் திருக்குலத்தையும், சட்டத்தின் ஆட்சிக்கு விடை கொடுத்து விட்டு சட்டம், ஒழுங்கை இஷ்டத்திற்குக் காயப்படுத்தி வரும் சர்வாதிகார அரசுக்கு சவுக்கடி தந்திட அணி வகுத்து வந்து மாநாட்டில் பங்கேற்கும் சட்டத் துறை தோழர்களையும் கண்டு கண்டு பேருவகை கொள்கிறேன், களிப்பிலாடும் கான மயிலாகிறேன்.

ஆகா, எத்தனை அணிகள் - அத்தனையும் கழகத்தின் வீரத் திருவுருவை அலங்கரிக்கும் மணிகள்! தகத் தகாயத் தங்கமணிகள்! வைரமணிகள்!

நான், தங்கமென்று அவர்களின் குணத்தையும் - வைரமென்று அவர்களின் உறுதியையும் தான் சொல்கிறேன்!

உடன்பிறப்பே, மனக் கண்ணால் நான் கண்டு மகிழும் இந்த மாநாட்டுக் காட்சி; நானும், நீயும் பெப்ரவரி திங்கள் 15, 16 ஆகிய நாட்களில் திருச்சியில் காண இருக்கும் மாநாட்டின் எள் முனை அளவு தான்.

அது ஏழு கடல்! எழுச்சிக் கடல்! அலை கடல்! ஆர்ப்பரிக்கும் கடல்! ஆயிரம், பதினாயிரம், லட்சம், கோடியென்று அல்லி மொக்குகள் திருச்சி மாநகரத்தைப் பெருந்தடாகமாக்கிக் கொண்டு கிளர்ந்தெழுந்தது போல எங்கு நோக்கினும் தலைகள்! தலைகள்! தலைகள்!

இன்னும் ஐந்து நாட்களுக்குப் பிறகு பார்க்கப் போவதை இப்போதே கனவு கண்டு மகிழ்கிறாயே, என்று விழிகளால் எனைக்

கேட்கும் நீ, இன்னொன்றும் கேட்பாய்; உன் கனவு நனவாகுமா என்று!

ஆகும் உடன்பிறப்பே, ஆகும்! ஆவதெல்லாம் உன்னாலே என்று நான் நம்பிக் கிடக்கும்போது; வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் வீரத் திருக் கூட்டமாக உன் கூட்டம் இருந்திடும்போது - ஆகும் என்று சொல்வதற்கு நான் ஏன் தயங்க வேண்டும்?

உனக்கொரு புதுமை சொல்லட்டுமா? பகலிலோ இரவிலோ அதிக நேரம் தூங்காமல் இளமை முதல் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டவன் நான். தேர்தல் பிரச்சார நேரங்களில் விடிய விடியக் கூட்டங்களில் பேசி விட்டு விடிந்து ஆறுமணிக்குப் படுத்து, ஏழு மணிக்கெல்லாம் எழுந்து பணிகளாற்றியவன் தான் நான்.

தொண்ணூறைத் தாண்டிவிட்டது வயது என்பதாலோ என்னவோ, அண்மைக் காலச் சில நிகழ்ச்சிகள் என்னைச் சற்றுக் கவலைப்பட வைக்கிறது. இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் என்னையுமறியாமல் வேதனைகளின் மேய்ச்சல் நடை பெறுகிறது என்பதாலோ இடையில் உறக்கமும் என்னை மறந்த உறக்கமல்ல; திருச்சி மாநாடு பற்றி உனக்கெழுதும் கடிதங்களில் என்னென்ன வாசகங்கள், வர்ணனைகள் குறிப்பிட்டிருந்தேனோ; அவையனைத்தும் வடிவங்களாகி வண்ணத் திரையில் ஓடுவது போல்; என் எண்ணத் திரையில் பதிந்து எழிலார் கனவுகளாகவே மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன.

இப்படி நான் கண்ட இந்தக் கனவெல்லாம் பலிக்கத் தான் போகிறது - திருச்சி குலுங்கத் தான் போகிறது - மாநில மாநாடு அறிவிக்கப்பட்ட பிறகு உன் போன்ற கழகக் கண்மணிகளிடத்திலே மட்டுமல்ல; பொதுவாகத் தமிழ் மக்களின் எல்லாப் பிரிவினரிடத்திலும் ஒரு புத்துணர்வு - எழுச்சி - முக மலர்ச்சி! எதையோ எதிர்பார்க்கிறார்கள்; அதை நம்மால் கொடுக்க முடியுமா?

நீயின்றி, உன் உழைப்பின்றி, உன் ஆற்றல் மிகு செயல்பாடின்றி - தனித் தியங்கித் தரையைக் குடைந்து காட்டுவேன் -

தீரர்கள் கோட்டம்; திருச்சி

வானத்தைக் கிழித்துக் காட்டுவேன் என்று என்றைக்கு நான் நினைத்திருக்கிறேன்? என்றைக்கு அப்படிச் சொல்லியிருக்கிறேன் - நினைத்தால் அல்லவா சொல்வதற்கு!

இதனைத் தெளிவாக அறிந்து கொண்டுள்ள என் உடன்பிறப்பே, திருச்சி மாநாட்டுக்குப் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் உனக்கு; வழக்கமாகச் சொல்வது தான் என்றாலும் - என் சொல்லை, நீயும் உன்னுடன் வரும் உடன்பிறப்புகளும் தட்ட மாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடனும், தட்டக் கூடாது என்ற வேண்டுகோளுடனும் உன் காதுகளில் போட்டுவைக்கிறேன்.

எந்த வாகனத்தைத் தேர்ந்தெடுத்து அதில் வந்தாலும் மிகுந்த எச்சரிக்கையுடன் வர வேண்டும். தேவையற்ற வேகமோ, அவசரமோ, பரபரப்போ பயணத்தின் போது கூடாது. நீ வந்து திரும்பி ஊர் போய்ச் சேருகிற வரையில் என் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பேன். சிறு தொல்லையுமின்றி வீடு போய்ச் சேர்ந்தாய் எனும் செய்தியே எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி வழங்கும், ஆறுதல் தரும்.

வழியில் ஆங்காங்கு ஓய்வெடுத்துக் கொண்டு பயணம் செய்க! வாகனங்களின் ஓட்டுநர்களும் பொறுப்புடன் செயல்பட வேண்டுகிறேன்!

மாநாட்டில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக மிக முக்கியம்! அவை நம் உயிரை விட மேலாகக் காப்பாற்றப்பட வேண்டியவை என்பதை மறந்திடக் கூடாது!

திராவிட இயக்கத்தைப் புதுப்பித்து வலுக் கூட்டி உறுதியுடன் நடத்திச் செல்லத் தானே; திருச்சியிலே கூடுகிறோம்! தீரர் கோட்ட மாயிற்றே திருச்சி!

எழுச்சி! எழுச்சி! எங்கணும் எழுச்சி! இதுவே இன்றைய திருச்சி! நாளை காணுவோம்; தமிழகத்தின் மலர்ச்சி!

அன்புள்ள,

மு.க.

# தீரர்கள் கோட்டம்; திருச்சி



MAYAA BOOKS, THENI
Theerargal Kottam TRICHY - Seedhai
153/0721 ₹ 20
PH : 04546 252515

**தலைவர் கலை**

ISBN : 978-93-82689-26-3

நூல் கிடைக்குமிடம் :

GO 1270

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
4a/168 வி.ஆர். பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
gowra09@gmail.com

www.gowrabookfair.com

ரூ. 20